699

6

Reg. No. M 2147

# THE "AGRICULTURIST"

***A monthly Journal devoted to Agriculture and its allied subjects***

2-NOV 1928
MADRAS

# "கிருஷிகன்"

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை.



| | | |
|---|---|---|
| **Vol. XI**<br>புத்தகம். XI | விபவஹு ஐப்பசிமீ 1உ<br>1928-ஹு அக்டோபர்மீ 17உ | **No. 7.**<br>பிரதி 7 |



CONTENTS



| | Page |
|---|---|
| Garlic | 145 |
| Correspondence | 151 & 162 |
| Some Common ailments In Cattle | 159 |
| News & Notes | 170 |
| Almanack | 171 |



பொருளடக்கம்



| | |
|---|---|
| வெள்ளைப்பூண்டு | 145 |
| கடிதம் | 151—162 |
| மாடுகளுக்கு உண்டாகும் சில சாதாரணவியாதிகள் | 159 |
| குறிப்புகள் | 170 |
| பஞ்சாங்கம் | 171 |



**Editor Rao Bahadur J Chelvaranga Raju**

"Jagannadha Baugh" Saidapet.

Annual Subscription Including Postage Re One only

Copy Right] [Registered

## கவனியுங்கள்

விவசாயத்தில் இப்போது அடையும் இலாபத்தைவிட அதிக இலாபம் பெற விரும்புகிறீர்களா ?

அப்படியானால் இந்தியாவிலேயே இந்தியர்களாலேயே செய்யப்பட்ட இந்திரிய வஸ்துக்களடங்கிய இயற்கை உரங்களை வாங்கி உபயோகியுங்கள்.

நாங்கள் எலும்புத்தூள், ஜவ்வு, கொம்பு சீவல், புண்ணாக்குகள் முதலிய சகலமான எருக்களையும் அந்தந்த பயிர்களுக்குத் தக்க எருக்களைக் கலந்தும் தயாரித்தும் விற்கிறோம்.

இயற்கை உரங்களைச் சேர்க்காமல் தற்காலம் அதிக அட்டகாசப்படுத்தி விற்கும் செயற்கைஉரங்களாகிய உப்பு உரங்களைத் தனியாய் உபயோகித்தால் கெடுதல் சம்பவிப்பதைப் போலல்லாமல் எங்கள் இயற்கை உரங்களால் எப்போதும் நன்மையே உண்டாவதோடு நிலவளமும், நாளுக்கு நாள், வாரத்திற்கு வாரம், மாசத்திற்கு மாசம் வருஷத்திற்கு வருஷம் அபிவிருத்தியடையும் என்பதில் சந்தேகமேயில்லை.

விலை முதலிய விரங்களறிய விரும்புவோர்:—
ஏ.ஜெ. ரோட்ரிக்ஸ் அண்ட் கோ.
ஏஜண்ட் கடம்பூர் எருக்கிடங்கு
கடம்பூர் (S. I.R )
என்று எழுதி முழு விவரங்களறியலாம்.

# "ஜெய ரங்கன்"

## J. R. ரங்க ராஜு

அவர்களால்எழுதப்படும் புதுநாவல். அச்சிலிருக்கிறது கூடிய ஜல்தியில் வெளிவரும். விலை ரூ ஒன்று தான்

## கம்பாலன்.

### தமிழ் மாதப் பதிப்பு

தென்னாட்டில் கம்ம ஜாதியப் பத்திரிகை இஃதொன்றே. கிராமவாசிகளுக்கவசியமான பொது விஷயங்கள் வெளிவரும். விளம்பரங்களுக்குத் தக்க சௌகரியமுண்டு. வருட சந்தாரூ. 1 தான்.

ஐக்கிய சங்கங்களுக்கும், பஞ்சாயத்துகளுக்கும் வேண்டிய புத்தகபாரங்கள் எம்மிடம் கிடைக்கும்.

R. வெங்கடசாமி நாயுடு.
பத்திராதிபர் "கம்மபாலன்
திருத்தாங்கல்

# THE "AGRICULTURIST"

***A monthly Journal devoted to Agriculture and its allied subjects.***

## "கிருஷிகன்"

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| **Vol. XI**<br>புத்தகம். XI | விபவ ஹு ஐப்பசி மீ 1உ<br>1928-ம் ஹு அக்டோபர் மீ 17உ | **No. 7.**<br>பிரதி 7 |

## GARLIC
## ALLIUM SATIVUM
### வெள்ளைப்பூண்டு.

இதற்குத் தமிழில் வெள்ளைப்பூண்டென்றும் தெலுங்கில் தெல்லகெட்ட என்றும் குஜராத்தியில் லாசான் என்றும் மராட்டியில் லாசண என்றும் கன்னடத்தில் பெல்லோலி என்றும் பெயர்.

இப்பயிரைச் சாகுபடி செய்ய வேண்டுமென்னும் அபிப்பிராயத்துடன் தென் ஜில்லாக்களிலுள்ள பல கிருஷிகர் எழுதிக் கேட்டிருக்கிறார்கள். இப்பயிர் அதிக மழை பெய்யாமலிருந்த போதிலும் பூமி குளிர்ச்சியாயிருக்கும் பிரதேசங்களில்தான் பயிராகுமென்பதையும் அதிக மழை பெய்தால் பயிர் சாவர வளராதென்பதையும், மழை காலத்திற்கேற்ற பயிரல்லவென்பதையும் தென் மேற்கு மழைகள் பெய்யும் பிரதேசங்களில் நன்றாய் வளருமென்பதையும், வடகிழக்கு மழைகள் பெய்யும் பிரதேசங்களில் பயிரிட வேண்டுமானால் கன மழைகள் போனபின் பயிரிடுதல் நலமென்பதையும் கவனித்துப் பயிர் செய்ய வேண்டுமென்பதை முக்கிய நோக்கமாக வைத்துக் கொண்டு கவனித்துப் பயிரிடுதல் அவசியம்.

கோயம்புத்தூர் ஜில்லா உடுமலைப்பேட்டைத் தாலுகாவில் மட்டும் சுமார் 1200 ஏக்கராக்களில் வருஷா வருஷம் இப்பயிர் செய்யப்படுகிறது. அங்குள்ள பயிரிடும் முறைகளையும் அப்பிராந்தியத்திற்கேற்ற பயிரிடும் காலத்தையும் எழுதுகிறோம். மற்ற பிராந்தியங்களில

பயிரிட விரும்புவோர் ஆங்காங்குள்ள சீதோஷ்ணங்களை முதல் பாரா வில் சொன்ன பிரகாரம் கவனித்து அவ்வவ்விடங்களுக் கேற்றவாறு முதலில் ஒவ்வொரு செண்ட் நிலத்தில் பல பருவங்களில் விதைத்துப் பார்த்துப் பரீட்சித்து எந்தப் பருவத்தில் அந்தப்பிராந்தியத்திற்குப் பயிர் நன்றாய்ப் பிடிக்கிறதோ அந்தப் பருவத்தில் சுமார் 10 செண்ட் நிலத்தில் பயிரிட்டுப் பார்த்துத் திருப்திகாமாய் விளைவதாகக் கண்டால் அப்பால அவரவர்கள் சக்தியானுசாரம் அதிக விஸ்தீரணங்களில் பயிரிடுதல் நலமாகும்.

நிலம்

வடிகால் வசதியுள்ள செவ்வல் அல்லது கரிசல் பூமிகளில்தான் இந்தப் பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. அத்துடன் முக்கியமாய் இப்பயிருக்கு நல்ல தண்ணீர் தேவை யென்பதை கவனித்துக் கொள்ள வேண்டும். உப்புத் தண்ணீராவது உவர்த் தண்ணீராவது பாய்ச்சினால் பயிர் சரிவர வளராது. ஆகையால் நல்ல ஜல வசதியுள்ள இடங்களிலதான் இப்பயிரிடல் லாபகரமாயிருக்கும்.

பயிரிடும் காலம்

சாரல் மழைகள் பெய்யுமிடங்களைப் போலொத்த உடுமலைப்பேட்டைக்கருகில் முதல் பயிர் வைகாசி ஆனி மாதங்களிலும், இரண்டாவது பயிர் கார்த்திகை மாதத்திலும் பயிர் செய்கிறார்கள்.

செய் நேர்த்தி.

முன்னமே தோட்டக்கால் நிலமாகச் செய்து சீர்திருத்தப்பட்ட நிலமாகில் ஏக்கர் ஒன்றுக்கு 40 முதல் 50 வண்டி வரை தொழு எரு அடித்துச் சிதறி எரு மறையும்வரை நிலத்தை பெரிய கலப்பையால் ஐந்து தரம் அலற உழுகிறார்கள். தொழு எரு அதிகமாய் அகப்படாத இடங்களில் ஆட்டுக் கிடைகள் மடக்கி அலற உழுது மறுபடியும் கிடைமறித்து உழுது நிலத்தை வளப்படும்படி செய்கிறார்கள். முதல் முதலாக இப்பயிர் செய்ய விரும்புவோர் ஏக்கர் ஒன்றுக்கு சுமார் 100 வண்டி வண்டல் அடித்து அப்பால் மேற் சொன்னவாறு எருவிட்டு நிலம் தயார் செய்கிறார்கள். 100 வண்டி வண்டல் அடிக்கும் செலவை அவ்வருஷத்திய செலவுடன் சேர்த்துக் கணக்குப் பார்க்கக் கூடாது-ஏனெனில் வண்டல் அடிக்கப்பிடிக்கும் செலவு நிலம் சாஸ்வதமாக நல்ல நிலமாக்குவதற்காகச் செலவழிக்கப்படுவதால் கிணர், வேலி, முதலிய சாசுவத வேலைகளுடன் கூட்டிக் கொள்ள வேண்டுமே தவிர அவ்வருஷ இலாப நஷ்டத்தில் சேர்த்துப் பார்க்கக்கூடாது.

## விதைப்பு

விதைப்பூண்டை நன்றாய்க் காயப்போட்டு விதைகளில் முளை வரும் பக்குவத்தில் விதைக்கிறார்கள். ஒரு ஏக்கர் விதைக்க 10 மணங்கு அல்லது 250 ராத்தல் தேவை.

இப்பயிர் விதைக்கு முன் நிலம் சிறுகட்டிகள் கூட இல்லாத தெள்ளு புழுதியா யிருக்க வேண்டுமென்பது மிகவும் அவசியம். வெங்காயம் பயிரிட நிலம் எவ்வளவு ஜாக்கிரதையாய் கட்டிகளில்லாமல் தெள்ளு புழுதியாக்கப்படுகிறதோ அவ்வளவு தெள்ளு புழுதியாக்குவது இப்பயிருக்கும் அவசியம். ஆங்கிலத்தில் எந்த நிலம் தெள்ளு புழுதியாக ஜாக்கிரதையாகச் செய் நேர்த்தி செய்யப்பட வேண்டுமோ அதற்கு “வெங்காயப் பயிர் செய்யும் நிலத்தைப்போல்” என்ற ஒரு வழக்கச் சொல் உண்டு. (அதாவது அதற்கு மேல் தெள்ளுபுழுதியாக்க முடியாது என்னும் நிலைமையில் என்று கொள்ள வேண்டும்.)

மேற்சொன்ன பிரகாரம் ஏருவிட்டு உழுது தயார் செய்த நிலத்தில் ஆங்காங்குள்ள தண்ணீர் வசதிகளுக்கேற்ற பிரகாரம் சிறு பாத்திகளாகவோ பெரும் பாத்திகளாகவோ பாத்திகள் கட்டி மட்டம்தட்டி தண்ணீர் பாய்ச்சி விதைப்பூண்டை பருப்புகளாகத் தோல் பிரிந்து போகாதபடி உடைத்து சுமார் 4 அங்குலத்திற்கொரு பருப்பு விழும்படியாகச் சிதறி சிறு கைக்களைக்கொட்டு கொண்டு அமுக்கி பூமியில் மறையும்படி செய்கிறார்கள். தவறியவற்றைக் கையால் அமுக்கி மறைக்கிறார்கள். நமது அபிப்பிராயத்தில் விதைகளைச் சிதறிய பின் சாம்பலும் எருவும் கலந்த மண்ணைத் தூவி மறையச்செய்தல் நலமென நினைக்கிறோம்.

அந்தந்த நிலங்களின் தன்மைகளுக்குத் தக்கவாறு ஈரம் காயாமலிருக்கும்படி 2 நாட்களுக்கொரு தண்ணீரோ மூன்று நாட்களுக்கொரு தண்ணீரோ நிலத்தில் ஈரப்பசையிருக்கும் வண்ணம் பாய்ச்சி வரவேண்டும். இவ்வாறு பாய்ச்சி வந்தால் விதைத்த 12 தினங்கள் முதல் முளை உருவ ஆரம்பித்து 15 தினங்களுக்குள் ஜாடாவாய் முளைத்துவிடும். அதற்குள் குறைந்தது 4 அல்லது 5 தண்ணீர் கட்டித் தீர வேண்டும்.

## பின்செய் நேர்த்தி

பயிர் முளைத்த 18 நாள் அல்லது 3 வாரங்களுக்குள் முதல் களை எடுக்கப்படுகிறது. அந்த முதல் களை ‘‘அம்பு’’ என்று சொல்லும் கூர்மையான ஓர் இரும்புக் களைக்கொட்டால் களை வெட்டப்படுகிறது.

பயிர் சுமார் ஒன்றரை மாதம் முதல் இரண்டு மாதங்களாவதற்குள் இரண்டாவது களை வெட்டப்படுகிறது. இரண்டாவது களை கைக் களைக் கொட்டுகளால் வெட்டப்படுகிறது. அந்த இரண்டாவது களை சரிவர வெட்டா விட்டால் பூண்டு சரிவரப் பிடிக்காது. ஆகையால் அக்களை வெட்டியதும் பூண்டு கட்ட ஆரம்பிக்கிறது. அதற்கப்பால் பயிருக்குக் குறைந்தது வாரம் இரு தண்ணீராவது பாய்ச்சித் தீர வேண்டும். தண்ணீர் பாய்ச்சுவது அந்தந்த நிலப்பான்மைக் கேற்ற வாறு பாய்ச்சிக் கொள்ள வேண்டும். மொத்தத்தில் நிலம் வரண்டு போகாமல் ஈரப்பதமாயிருக்க வேண்டுமென்பது தான் கொள்கை.

இதன் இலைகள் ஈட்டிபோல் நீளமாயும், தட்டையாயும் நுனி கூர்மையாகவும் இருக்கிறது. பயிர் சரிவர வளர்ந்தால் 18 அங்குலம் உயரம் வளரும். அதன் புஷ்பங்கள் சிறியவைகளாகவும் வெள்ளை நிறமாகவும் இருக்கும்.

பம்பாய் இராஜதானியில் ஏறக்குறைய சுமார் 7500 ஏக்கர்கள் வரையில் இப்பயிரிடப்படுகிறது. முக்கியமாய் பெல்காம், தார்வார், நாசிக், புனா, சத்தாரா முதலிய இடங்களில் தான் விசேஷமாய்ப் பயிரிடப்படுகிறது.

இதுவரையில் வெள்ளைப்பூண்டு பயிரிட்டிருக்காத இடங்களில் வெங்காயம் பயிர் செய்யும் பட்டங்களில் வெள்ளைப் பூண்டைப் பயிரிட்டால் அநேகமாய் சரியான பட்டமாயிருக்குமென்று நாம் நினைக்கிறோம். ஆகையால் பரீட்சிக்க விரும்பும் கிருஷிகர் அக்காலத்தில் பரீட்சித்துப் பார்ப்பது நலமென நினைக்கிறோம்.

களைவெட்டுமுன் எருச் சிதறி அப்பால் களை வெட்டினால் மேலே சிதறிய எரு களை வெட்டும்போது மண்ணுடன் கலந்து பயிர்களுக்கு எருவாகும்.

அறுவடை

இப்பயிர் அறுவடையாக சுமார் நாலரை முதல் ஐந்து மாதங்கள் வரை பிடிக்கும், அதாவது வைகாசி ஆனி மாதங்களில் விதைத்த பயிர் புரட்டாசி ஐப்பசியிலும், கார்த்திகை மாதம் விதைத்த பயிர் பங்குனி மாதத்திலும் அறுவடைக்கு வரும்.

வெள்ளைப் பூண்டுப் பயிரின் இலைகளின் மத்தியில் வரும் புஷ்பங்கள் வெள்ளை நிறம் மஞ்சள் நிறமாக மாறின உடனேயும் தாள்கள்

கழுத்துக் கீழே சாய்ந்து விட்ட உடனும் பயிர் அறுவடைக்கு லாயக்கெனத் தெரிந்து கொள்ள வேண்டும்.

உடனே நிலம் ஈரமாயில்லா விட்டால் ஒரு தண்ணீர் கட்டி தண்ணீர் சரிவர ஊறி பூமி ஈரமாயிருக்கும்போது தாள்களைப்பற்றி இழுத்தால் கிழங்குடன் எடுத்துவிடக் கூடும். சுமார் 20 பூண்டுகள் இழுத்து எடுத்தவுடன் அவைகளை ஒன்ருய்ச் சேர்த்துக் கட்டி பூண்டுகளை வெளிப் பக்கமாகவும் தாளைகளை உள்ளேயும் வைத்துப் போரடைந்து அம்பாரமாக 2 அல்லது 3 தினங்களுக்கு வைத்திருக்க வேண்டும். அப்பால் அம்பாரத்தைப் பிரித்துத் தாள்களை அறுத்தெரிந்து விட்டு பூண்டுகளை 3 தினங்கள் வரை காயப்போட வேண்டும். பூண்டுகள் நன்ருய்க் காய்ந்ததும் காற்றில் தூற்றி சுத்தமாக்கி அதிக நெருக்கமில்லாமல் நிழலில் காற்ருேட்ட மிருக்கும்படி உலரப்போட வேண்டும். பூண்டு சரியானபடி இவ்வாறு பக்குவப்படுத்தப்பட்டால் குறைந்தது 6 மாதங்கள்வரை நல்ல ஸ்திதியிலிருக்கும். பூண்டுப்பயிர் திறமாய் வந்திருந்தால் 8 பாரம் அல்லது 160 மணங்கு அல்லது 4000 ராத்தல் பூண்டு கண்டு முதலாகும். சாதாரண பயிராயிருந்தாலும் சுமார் 6 பாரம் அல்லது 120 மணங்கு அல்லது 3000 இராத்தல் ஏக்கருக்கு அகப்படும். இவ்வாறு அகப்படுவது வெயில் காலப் பயிரிலே யல்லது கார்த்திகை மாதத்தில் விதைக்கும் மழை காலப்பயிரிலில்லை. ஏனென்ருல் வெயில் காலத்தில் விதைக்கும் பயிர் கனமாயிருப்பதாலும் ஒரே மாதிரி ராசி பிடிப்பதாலும் இடை ஏறி அவ்வாறு அதிகமாகிறது. இரண்டாவது மாசூல் பயிரோ கனமாயிராமல் இலேசாயிருப்பதாலும் ஒரே மாதிரி பூண்டு பிடிக்காததாலும் முதல் மாசூலைவிட ஒரு பாரம் அல்லது 20 மணங்கு அல்லது 500 ராத்தல் குறைவாகவே மாசூல் கிடைக்கும். மழை காலத்தில் செய்யும் பயிருக்கு வெயில் காலத்திலிடும் பயிருக்குப் பிடிக்கும் தண்ணீரில் ஏறக்குறைய அரை பாகம் தண்ணீர்தான் பிடிக்கும். ஆகவே இந்த இறைவைச் செலவைக் கவனித்தால் ஏறக்குறைய இரண்டு பயிர்களிலும் இலாபம் சமமாகத்தான் கிடைக்கும்.

ஒரு ஏக்கர் வெள்ளைப்பூண்டு பயிரிட்டால் ரூ 250 முதல் ரூ 300 வரை செலவுபோக இலாபம் கிடைக்கும். எல்லா வர்களிலும் எருவிலை மாசூல்விலை கூலி முதலியவை ஒன்ருயிருக்கா தென்று எல்லோருக்கும் தெரியும். ஆயினும் பின்னால் ஒரு தோராயக் கணக்கு கொடுத்திருக்கிறோம்.

சிலவு

| | ரூ | அ | பை |
|---|---|---|---|
| பெரிய கலப்பை கொண்டு ஒரு ஏக்கா நிலம் 5 சால் உழுவதற்கு | 10 | 0 | 0 |
| 50 வண்டி மாட்டு அல்லது ஆட்டுசாணியின் விலை | 75 | 0 | 0 |
| ஒரு ஏக்கர் நிலத்தில் எருச் சிதறி கட்டி உடைத்து பாத்திகட்ட கூலி | 5 | 0 | 0 |
| விதைபூண்டு மணங்கு 1க்கு 5 ரூ. விதம் 10 மணங்கு விதைப்பூண்டு | 50 | 0 | 0 |
| விதைப் பூண்டை பாத்திகளில் சிதறி களைக்கொட்டால் மறைத்து மூட | 5 | 0 | 0 |
| 3 களைகள் வெட்ட கூலி | 15 | 0 | 0 |
| 3 களைகள் வெட்டுமுன் தடவை ஒன்றுக்கு 5 வண்டி விதம் மேல் எரு சிதற எருவின் கிரயம் | 22 | 8 | 0 |
| ஷை எரு சிதறக்கூலி | 3 | 0 | 0 |
| 40 தண்ணீர் இறைக்கக் கூலி | 80 | 0 | 0 |
| மாசூல் பிடுங்கி கட்டி போரடைந்து அறுத்து காயப்போட கூலி | 25 | 0 | 0 |
| சில்லரை சிலவு | 9 | 8 | 0 |
| மொத்த சிலவு | 300 | 0 | 0 |

வரவு

| | | | |
|---|---|---|---|
| மணங்கு ஒன்றுக்கு ரூ. 3-8-0 விதம 160 மணங்குவிலை | 560 | 0 | 0 |
| செலவு | 300 | 0 | 0 |
| இலாபம் | 260 | 0 | 0 |

பம்பாய் இராஜதானியில் ஏக்கர் ஒன்றுக்கு 320 மணங்கு முதல் 400 மணங்கு வரை மாசூல் கிடைக்கிறது. நாம் மேலே கணக்குப் போட்டுக் காட்டியிருப்பது அதில் பாதி பாகத்திற்கும் குறைவென்பதை நமது சந்தா நேயர்கள் கவனிக்கக் கோருகிறோம்.

# CORRESPONDENCE

## கடிதம்

கனம் கிருஷிகன் பத்திராசிரியரவர்களுக்கு அநேக கோடிவந்தனம். முன் என நிலத்தில் அநேகமாய் நாணற்புல் வளர்ந்து பயிர் செய்வதற்கு சற்றும் லாயக்கில்லாமலிருந்தபோது தங்களை நேரில் அழைத்துப் போய் அபிப்பிராயம் கேட்கத் தாங்கள் தங்களுடைய பெரிய இரும்புக் கலப்பையைக் கொண்டுவந்து தாங்களே ஷை கலப்பை கொண்டு தங்கள் கையாலேயே உழுது அறுவரையில் அதிக தொந்தரவு கொடுத்து வந்த நாணற் புல்லை அறவே ஒழித்ததோடு ஷை புல்லை பண்டச்சாலிலேயே மடியும்படி செய்து உழுதவுடன் தண்ணீர் கட்டி மக்கவைத்துப் பின் பயிரிடும்படிசொன்ன பிரகாரம் செய்ததில் ஷை நாணற்புல் அறவே அழிந்தொழிந்ததோடு எனது நிலமும் சத்துள்ள நஞ்செய் நிலமாக மாறி இப்போது தக்க பலன் கொடுத்துக் கொண்டு வருவதற்காக நானும் எனது சந்ததியாரும் தங்களுக்கு நீடூழி காலம் நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

நிற்க இப்போது எனது தோட்டத்திலிருக்கும் திராட்சைச் செடியானது ஏதோ ஒரு வியாதியால் பீடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதன் துளிர்கள், இலைகள், காய்கள், பழங்கள் முதலியன எல்லாம் ஒரு மாவுபோன்ற பொடியினால் மூடப் பட்டதுபோல முதலில் தோன்றுகிறது. பின்னால் வெள்ளை நிறம் மஞ்சள் நிறமாக மாறிக் காய்ந்து கீழே விழுந்து விடுகின்றன. பிஞ்சுகளும் காய்களும இவ்வாறுணவுடன் அழுகிக் காய்ந்து விடுகின்றன. இதனால எனக்கு அதிக நஷ்டம் உண்டாகிறது. நான் பிரதி சாப்பாட்டிற்குப் பின்னும் திராட்சைப் பழத்தைப் புசிப்பது தங்களுக்குத் தெரியும். அதிலும் கடைகளில் விற்கும் வெம்பினகாய்களையும் முக்கால் காய்களையும் பழுத்தவைகளாகக் கருதி சாப்பிடப் பட்டவனல்ல; செடியிலேயே பழுத்து சாப்பிடும் வழக்க முண்டென்பதையும் தாங்களறிவீர்கள்.

தாங்கள் தயவுசெய்து கூடிய ஜல்தியில் தங்களுக்குச் சௌகரியப் பட்டபோது தங்கள் பாததூசி என் நிலத்தில் படியுமாறு நேரில் வந்து பார்வையிட்டு இப்படிச் செய்யவேண்டுமென்று தெரிவித்தால் உடனே அப்படிச் செயது பலனடையலாம் என்னும் நம்பிக்கையுடன் எழுதுகிறேன். விவசாய டிபார்ட்டுமெண்ட்டுக்கு எழுதித் தெரிந்து கொள்ளும்படி உத்தரவிடாமல் தயவுசெய்து தாங்களே நேரில் வந்து பார்த்து தங்கள் ஆழ்ந்த அநுபோகத்தை யொட்டிய அபிப்பிராயம் கொடுத்தால் தான் நலம். தங்களுககு இப்போது உடனே வர சௌகரியப் படாவிட்டாலும் தாமதித்தாகிலும் சவுரியம்போல் வரக் கோருகிறேன்,

நான் சொல்லும் மாதிரியினால் இந்த நோயென தாங்கள் தெரிந்து கொண்டால் உடனே பதில் தெரிவிப்பதோடு மற்ற கிருஷிகருக்கும் உபகா

ரப் படும் வண்ணம் தங்கள் பத்திரிகையிலும் பிரசுரிக்க விரும்புகிறேன்.

தங்கள் நன்றியை எப்போதும் ஞாபகத்தில் வைத்திருக்கும்

பொன்னுசாமி முதலியார்.

மிராசுதார் புலியூர்.

பதில்

நாம் இப்போது திருநெல்வேலி ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்வதால் உடனே வந்து பார்ப்பதற்கில்லை, அநேகமாய் தாங்கள் குறிப்பிடும் நோய் திராட்சைச் செடிகளில் விழும் "சாம்பல் நோய்" என்று கிருஷிகர் சொல்லும் நோய் ஆகத்தானிருக்கலாமென்று நினைக்கிறோம்.

இது ஒரு பூஞ்ஜாணநோய்.அந்தப் பூஞ்ஜாணத்தை வெறுங்கண்ணினால் பார்த்தால் தெரியவராது. ஆனால் ஒரு வஸ்துவை அநேக ஆயிரம் பங்கு அதிகப் படுத்திக் காட்டும் "அணுதர்சனி" என்னும் கருவியின் உதவியால் பார்த்தால் இது நன்றாய்த் தெரியும். வெள்ளைப் பொடிகள் போல் காணப்பவைகளெல்லாம் அப்பூஞ்ஜாணநோய் விதைகள் தான். அனேகமாய்காற்றின் உதவியால் ஒரு செடியிலிருந்து மற்றொரு செடிக்கும் ஒரு தோட்டத்திலிருந்து வேறு தோட்டத்திற்கும் ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கும் கொண்டு போகப் படுகிறது. இவ்வியாதி பரவுவதற்கு இன்னொரு மார்க்கமும் உண்டு. பக்ஷிகளாவது, ஈ, கொசு, முதலிய பிராணிகளாவது அந்நோய் பட்ட பாகத்தில் உட்கார்ந்து எழுந்து போய் வேறு செடியில உட்கார்ந்தால் அவைகளின் கால்களிலாவது தேகங்களிலாவது அப்பூஞ்ஜாண விதைகள் ஒட்டிக் கொண்டு போய் அவ்விடத்திலும் பரவிவிடும்.

ஸ்பிரேயர் என்னும் பீச்சாங்குழலின் மூலமாய போர்டியோமிக்சர் என்னும் மருந்தை அந்நோயால் பீடிக்கப்பட்ட பாகங்களிலெல்லாம் தெளித்து வந்தால் அந்நோய் சில தினங்களில் அற்றுப் போகும். போர்டியோ மிக்ஸ்சர் தாங்களே தயாரித்துக் கொள்ளலாம். அது சரியாய்த் தயாரிப்பதற்கும் ஸ்பிரேயர் என்னும் பீச்சாங்குழல் அகப்படுவதற்கும் தாமதமாகுமெனத் தெரிந்தால் எல்லாக் கடைகளிலும் விற்கும் மயில்துத்தத்தையும் சுண்ணாம்பையும் தண்ணீரில் கலந்து நோய்பட்ட பாகங்களில் தெளித்தால் நோயைத் தடுக்கக் கூடும். ரோசனமும் சோடாமாவும் கலந்து கொஞ்ச நேரம் கொதிக்க வைத்தால் ஓர்வித பிசினிபோன்ற ஜலமாகிவிடும்.

அதையும் மேற் சொன்ன மயில் துத்தமும் சுணணாம்பும் கலந்த தண்ணீருடன் சேர்த்துக் கலக்கி வியாதிப்பட்டபாகங்களில தெளித்தால் அத்தண்ணீர் உடனே வடிந்து போகாமல் வியாதிப்பட்ட பாகங்களில் ஒட்டிக் கொண்டு வியாதியைக் கொல்லும். மழை பெய்தாலும் இத்தண்ணீர் அப்பால் கரைய மாட்டாது. இம்மாதிரி தாங்கள் கையாடினால் வியாதியைத் தடுக்கலாம்.

போர்டியோ மிக்சர் சரியானபடி செய்யும் முறைபின்வருமாறு.

போர்டியோ மிக்சர் அன்றாட உபயோகத்துக்கு எவ்வளவு தேவையோ அந்த அளவில் அன்றாடகம் புதிது புதிதாகச் செய்து உபயோகிப்பது நலம்.

ஐந்துகாலன் அல்லது பக்காப் படிக்குப் பனிரெண்டரைப்படி போர்ட்டியோ மிக்ச்சர் செய்யுமுறை கீழ்குறிப்பிடுகிறோம்:

அதற்கதிகமாகவோ குறைவாகவோ செய்து கொள்ள விரும்பினால் அதற்கேற்றபடி அளவை அதிகமாகவும் குறைத்தும் சேர்த்துக் கொள்ள வேண்டும் மேல் குறிப்பிட்ட அளவு செய்வதற்கு வேண்டிய சாமான்கள்.

ஒருராத்தல் அல்லது பவுண்ட் இடை மயில்துத்தம், பனிரெண்டரைப்படி தண்ணீர், ஒரு ராத்தல் சுட்ட சுண்ணாம்பு, 16 தோலா ரோசினம் (ஒருதோலா என்பது ஒரு ரூபாய் இடை) 8 தோலா சோடாமாவும்.

ஒரு மண்பாத்திரத்தில 6 பக்காப்படி ஜலம்விட்டு, மயில்துத்தத்தை நன்றாய்ப் பொடி செய்து அப்பொடியை கோணியில் கட்டி தண்ணீருள்ள மண்பாத்திரன்மேல் குறுக்கில் ஒரு கட்டையை வைத்து மயில் துத்தக் கோணியை அக்கட்டையில் கட்டி பானைக்குள்ளிருக்கும் தண்ணீரில் அமிழும்படி தொங்க விடவேண்டும். கோணியிலிருக்கும் மயில் துத்தத் தண்ணீரில் நனைந்து கரைந்து போவதால்கோணியில் ஒன்றும் இராது- கோணியை அபபோது அப்புறப் படுத்தி விடவேண்டும்.

வேறு ஒரு சட்டியில் ஒரு ராத்தல் புதிதாகச் சுட்ட சுண்ணாம்பைக் கொண்டு வந்து போட்டு சுமார் அரைபடிஜலம் சுண்ணாம்பின்மேல் தெளிக்க அது நன்றாய் வெந்து நீறாகிவிடும். ஐந்தரை பக்காப்படி ஜலம் விட்டு நன்றாய்க் கிளற சுண்ணாம்புத் தண்ணீராகி விடும். இந்த சுண்ணாம்பு ஜலத்துடன் மயில்துத்தத் தண்ணீரை கொஞ்சம் கொஞ்சமாய்விட்டுக்கிளற முழுதும் மேகவர்ணமடையும். இதைத்தான் போர்டியோமிச்சர் என்று சொல்லுகிறார்கள்:

முக்கால் பக்காப் படித் தண்ணீரில் 8 தோலா சோடாமாவைக்கலந்து அடுப்பில் வைத்துக் கொதித்தவுடன் 16தோலா இடை ரோசனத்தூள் செய்து கொஞ்சம் கொஞ்சமாய்ப் போட்டு ஜலம் பொங்கி கீழே வடிந்து போகாமல் அடுப்பை அரைமணி நேரம்வரை சிறுக எரித்துப் பின் அரைமணி நேரம் நன்றாய் எரித்துக் காய ரோசினமே சோடா கலந்த ஜலம் காப்பி கஷாயம்போல் தெளிவடையும். அப்போது போர்டியோகமிக்சருடன் கலந்து விடவும்.

இந்த மிக்சர் சரியானபடி கலக்கப் பட்டிருக்கிறதா யென்று கண்டறிவதற்கு பளபளப்பாய் தீட்டிய கத்தியை அத்தண்ணீரில் முக்கி ஒரு நிமிஷநேரம் வைத்து எடுத்தால் அதில் சிகப்புவர்ணம் படிந்திருக்கக் கூடாது அப்படி சிகப்புவர்ணம் கத்தியில் படிந்தால் கொஞ்சம் சுண்ணாம்பு நீர்

சேர்த்த பின் கத்தி கொண்டு பரீட்சித்து சரியாயிற்று யென அறிந்து கொள்ளலாம். அப்பால் நன்றாய்க் கிளறி சிறுகண்வலையுள்ளஜல்லடையில் வடிகட்டி ஸ்பிரேயரால் தெளிக்கலாம்.

## திராட்சைச் செடிகளைப் பராமரிப்பதில் கவனிக்க வேண்டிய சில முக்கியமான விஷயங்கள்

(1) திராட்சைக் கொடிகளை வெட்டி நடுவதற்கு முன்னால் சரிவரத் தயாரித்த போர்டியோ மிக்ச்சர் என்னும் மருந்துத் தண்ணீரிலாவது நாம் மேற்சொன்ன விதமாய்த் தயாரித்த ஜலத்திலாவது முக்கி எடுத்து நடுவது நலம்.

(2) திராட்சைச் செடிகள் நிழலில் சரிவரவளராது. நிழல் கொடுக்கக் கூடிய இடத்தில் நடக்கூடாது. அப்படி நட்டிருந்தால் சமீபத்திலிருக்கும் நிழல் கொடுக்கக் கூடிய மரங்களை வெட்டி அப்புறப்படுத்தி விடவேண்டும்.

(3) செடிகளை நெருங்க வைக்காமல் கலக்க வைக்கவேண்டும்.

(4) செடிகளின்வேர்களில் ஈரப் பதமிருக்கும்படியும் ஈ மொய்க்கும்படி ஈரமிருக்கும்படியும் தண்ணீர் கட்ட வேண்டுமே தவிர சேறாயிருக்கும்படி தண்ணீர் கட்டக் கூடாது.

(5) திராட்சைச்செடிகள் பந்தல் அளவு போகும் வரையில் ஒரே ஒரு கொடி மட்டும் போகும்படிவிட்டு மற்றக் கொடிகளை அப்போதைக்கப்போது துளிர்களிலேயே அப்புரப்படுத்தி ஒரே கொடியாகக் கொண்டு போய் பந்தல் உயரம் போன பின் தான் படர விட வேண்டும்.

(6) செடிகளை வருஷம் இருமுறையாவது கவாத்து செய்ய வேண்டும். அப்படிக் கவாத்து செய்யும்போது வியாதிப்பட்டதும், கிழமானதும் மெலிந்ததுமான கிளைகளையும் இலைகளையும், பட்டைகளையும் கவாத்து செய்து உடனே அவைகளை வெளியேகொண்டுபோய் ஓரிடத்தில் போட்டு ஓலை செத்தை சருகுகளைக் கூடப்போட்டு எரித்து விடவேண்டும்.

(7) ஒவ்வொரு தரம் திராட்சை செடி காய்க்கும்போதும் மேற்சொன்னமருந்துத் தண்ணீரைக் குறைந்தது ஐந்து முறையாவது பீச்சாங் குழல் கொண்டு தெளிக்க வேண்டும்:

(a)கவாத்து செய்த இரண்டுவாரங்களில் புதியதாக நல்ல துளிர்விட்டு இலைகள் புதிதாகவரும். அப்போது இந்நோய் தாக்க இடமுண்டாகையால் முதல் தடவை அத்துளிர்களின் மேல் தெளிக்கவேண்டும்.

(b) செடிகள் புஷ்பித்து பிஞ்சிபிடித்தஉடனும் பூமாறிய பின்னும் இரண்டாவது முறை தெளிக்க வேண்டும்.

(c) அரைக் காய்களானவுடன் மூன்றாவது முறையும்,

(d) முக்கால் காய்களானவுடன் நான்காவது முறையும்,

(e) முற்றி மாறுல் அறுவடை செய்யுமுன் கடைசி தடவையும் இம் மருந்தைத் தெளிக்கவேண்டும். பட ர்.

ம-ா-ா-ஸ்ரீ கிருஷிகன் பத்திராதிபர் அவர்களுக்கு,

ஐயா, நான் இவ்வருஷம் கம்போடியா பருத்தி புதிதாக பயிரிட்டு இருக்கிறேன். 1: செப்டம்பர்மீ 4க் தேதி விதைத்தேன். நன்றாக பயிராகி இருக்கிறது. அது இந்த பக்கத்துக்குப் புதிய பயிர். அதனால் அதற்கு எப்பொழுது களைவெட்டவேண்டும். 2 எத்தனை களைவெட்டவேண்டும். 3 ஜலம் எத்தனை நாளைக்கு ஒருதரம் பாய்ச்ச வேண்டும். 4 எத்தனை மாதத்தில் பலன் தரும். 5 அதற்கு யாதாவது ரோகு தாங்குமா? அப்படி இருந்தால் அதை எப்படி நிவர்த்திப்பது. 6 விதைப்பதற்கு முன் இரண்டு தடவை மாட்டுக் கிடை கட்டியிருக்கிறேன். அதுவுமன்றி அது இரண்டு வருடமாக காம்பாக இருந்த பூமி. 6 மத்தியில் யாதாவது எருவு போடவேண்டுமா? அப்படி போட வேண்டியதாயிருந்தால் என்ன எருவு போடவேண்டும், எப்பொழுது போட வேண்டும். விதை எடுக்கும் விதம் எப்படி? இவைகளை தாங்கள் விபரமாகக் கூடிய சீக்கிரத்தில் எனக்கு தெரிவிப்பீர்களென்று நம்புகிறேன். தங்களுக்கு கொடுத்த சிரமத்தை மன்னிப்பீர்களாக. இத்துடன் ஒரு அணு ஸ்டாம்பும் அனுப்பியிருக்கிறேன். தங்கள் பதிலைப் பார்த்து தான் நான் களை வெட்டவேண்டும்.

தங்களன்புள்ள,

என். ஆர். ஐயாசாமி,

ஜமீன்தார், புதுபட்டணம்.

## பதில்

1 கிருபநேயர் கைவிதைப்பாய் விதைத்ததும் சால் விதையாய் வரிசை வரிசையாய் விதைத்ததும் தெரியவில்லை. சுமார் எத்தனை அடிக்கு ஒரு செடி யிருக்கிறதென்றும் தெரிவிப்பதவசியம். இப்போது செடிகளை கலப்பிக்க வேண்டிய பருவமாதலால் இதை உடனே செய்யாட வேண்டும். சாலுக்கு சால் ஒன்றரை முதல் இரண்டடி அகலம் இருக்கும்படி விட்டும் சாலில் செடிக்குச் செடி குறைந்தது ஒரு அடிக்குக் குறையாமலொன்றுமாக இருக்கும்படியும் கலப்பிக்க வேண்டியதவசியம். கை விதைப்பாயிருந்தால் கூடிய வரையில் வரிசையா யிருக்கும் செடிகளை இந்த அளவில் வரும்படி விட்டு மத்தியிலிருக்கும் செடிகளை அப்புறப்படுத்தி விடவும். 2 இப்போது முதல் களை வெட்ட வேண்டிய பருவந்தான். இப்போது களை யெடுக்கா விட்டால் இனி வருவது மழை காலம். மாமூல் பருவமாயிருந்தால் ஐப்பசி கார்த்திகையில் களை வெட்ட இடம் கொடாது. மழை காலம் முடிவாகும் வரை தண்ணீர் தேவையில்லை. 3 மழை பெய்யாவிட்டால் மணல் பாங்கான நிலங்களில் 10 நாளைக்கொரு தரம் தண்ணீர் போதும். இரண்டு தண்ணீர் பாய்ச்சின காலத்திற்கிடையில் மேல் மண் 2 அங்குலம் கீழிறி விடுவதாகில் 15 நாளைக்கொருதரம் தண்ணீர் போதும். 4 செப்டம்பரில் விதைத்த பயிர் டிசம்பர் மாதத்திற்கு முன் பூத்து காய்த்தாலும் ஆணிக்காய் விழுந்து சரியா

னபடி சொளைகள் விரிந்து வெடிக்க மாட்டாது. "தைப் பருத்தி நடவி எடு" என்னும் வழக்குச் சொல் பிரகாரம் தையீ முதல் ஆரம்பித்து மாசி, பங்குனி, சித்திரை வரை பஞ்சு வெடித்து ஓய்ந்து விடும். அப்பால் கோடை மழைகள் பெய்த உடன் கொத்தி பாத்திகள் கட்டி தண்ணீர் பாய்ச்சினல் 2வது பலன் தரும். சில இடங்களில் காலப்பருத்தியை விட இது அதிக அளவு மாசூல் கொடுத்தபோதிலும், இரண்டாவது மாசூல் பருத்தி முதல் மாசூல் பருத்தி விற்கும் விலை விற்காது. ஆகையால் இரண்டு மாசூல் பருத்திகளையும் கலக்காமல் தனித்தனியாய் விற்பது நலம். இரண்டாவது மாசூல் பருத்தி வரையில் விட்டிருந்தால் பயிரில் பூச்சிகள் விழ ஏதுவிருக்குமாதலால் முதல் மாசூல் முடிந்தவுடன் செடிகளைப் பிடுங்கி விட்டு வேறு தோட்டக்கால் பயிர் போடுவது திடம் என்பது நமது அபிப்பிராயம். 5 (a) முளை உருவும்போது கூனல் வண்டு அழிக்கும். (b) வேர் புழு அடித்து செடிகள் சாகும். (c) குருத்துகள் நாசம் செய்யும் புழுவின் பாதையுண்டு. அதனுல் செடி நஷ்டமாகாமல் கிளைக்கும். (d) வேருக்குமேல் கோவிகள் போல உருண்டை கட்டி புழு துளைத்து செடிகளை நாசம்செய்யும். இதனுல் செடிகள் அதிக நஷ்டப்படும். இதை நிவர்த்திப்பதற்கு வருஷத்திற்கு எழுபத்தையாயிரம் ரூபாய் சீமையிலிருந்து பருத்தி வியாபாரச் சங்கத்தார் கொடுத்து வருகிறார்கள். இதற்கு சரியான நிவர்த்தி இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. (e) காய்களை துளைக்கும் புழு. (f) இலைகள் பழுத்து செந்தாழை நோய் போல் விழுவதுமுண்டு, இன்னும் பலநோய்களுமுண்டு. இவைகளில் ஏதாவது சம்பவிததால் கோயம்புத்தூரிலிருக்கும் பூச்சி சாஸ்திரிக்கு பூச்சிகளைக் குறித்தும், பூஞ்சாண சாஸ்திரிக்கு பூஞ்சாண நோய்களைக் குறித்தும் எழுதினல் அவர்கள் தகுந்த சிகிச்சை சொல்லுவார்கள், 6 நாட்டுப் பருத்தியின் வேர்கள் பூமிக்குள் போகும், கம்போடியாப் பருத்தியின வேர்களோ பூமியின் மேல் பரப்பிலேயேதான் பரவும், ஆகையால் தாங்கள் இப்போது கட்டிய 2 கிடையே போதுமென்று நினைக்கிறேம். (7)2வது மாசூல் எடுப்பதானுல் மழைகள் பெய்தவுடன் கொத்தியவுடன் 500 ராத்தல் முத்துக்கொட்டை புண்ணுக்கு ஏக்கருக்குப் போட்டு தண்ணீர் பாய்ச்சி வரவும். 6 கம்போடியா பருத்தி விதை நாட்டுப் பருத்தி விதையைவிட பெரியதாயிருப்பதால் அதற்கேற்றபடி உருளைகள் அமைத்து கை ராட்டினங்களில் அறைத்து எடுக்கலாம். விதைகள் சேதப்பட்டால் கையில் பிய்த்தெடுப்பது சிலாக்கியம், ஜின்னிலும் அரைத்து விதை யெடுக்கலாம். ஆனுல் இதர விதைகள் கலக்க ஏதுவுண்டு.

ப. ர.

ஃ ஃ ஃ

அன்புமிகுந்த ஐயா!

தங்கள் கிருஷிகன் புத்தகம் 11 பிரதி 6 வரப் பெற்றேன்! அதில் கடிதம் என்னும் விஷயத்தில் எனக்கு எழுதிய பதிலைப்பார்த்தேன், மிகவும் வரு

த்தமடைந்தேன். நான் அந்தக் கடிதத்தில் சரியான காரணத்துடன பதிலை எதிர்பார்க்கிறேன், என்று எழுதியது உண்மையே, ஆனால் தாங்கள் அந்தவரி ஒன்றைக் கொண்டுதான் மிகுந்த ஆத்திரத்துடன் பதில் வரைந்திருக்கிறீர்கள்,

நான் எழுதிய வார்த்தையில் யாதொரு வித கல்மஷமும் இல்லை என்பது நிச்சயம், அதுவுமில்லாமல் நீங்கள் தங்களுக்கு சந்தேகம் எழுதும் ஒவ்வொருவர்களுக்கும் தாமதமின்றி பதில் அனுப்பி வர்தீர்கள்: ஆனால் எனக்கோ பதில் வராத ஓர் காரணத்தைக் கொண்டு ஜல்தியில் பதிலை எழுத வேண்டிய நிமித்தமே அவ்வாறு எழுதினேன். நான் தங்கள் மனதில் இவ்வாறு மாறுபாடான அர்த்தம் கொள்வீர்களென்று நம்பவில்லை. இம்மாதிரி ஓர் பத்திரிகையில் பதில் எழுதுவது தங்கள் போன்ற கற்றறிவாளர்களுக்கு அழகல்ல, ஏதோ தாங்கள் மனம்போனபடி பதில் எழுதுகிற வழக்கமுடையவர்களென்று இதை இத்துடன் நிறுத்துகிறேன்:

2. பிராம்மண குலத்திற்கே ஓர் இழிவை உண்டாக்கக் கூடிய வார்த்தையை எழுதி விட்டதால் தாங்கள் ரொம்பவும் புத்திமான் என்ற எண்ணத்துடன் எழுதிய வார்த்தையை வாபீஸ் வாங்கிக் கொள்வீர்களென்று எதிர்பார்ப்பதுடன் நானே பத்திரிகையை அனுப்பி பணம் தங்களிடமிருந்து பணத்தைத் திரும்பவும் வாங்கிக் கொண்டால் யாருக்கும் (நம்மிருவருக்கும்) யாதொரு நஷ்டமும் இல்லை என்பதை தெரிவிக்கிறேன்,

தயவு செய்து முன்போல் "கடிதம்" என்னும் தலைப்பில் இதையும் பிரசுரிக்க வேண்டுகிறேன்.

S. V. நாகேஸ்வரஐயர்.

## பதில்

அன்பார்ந்த ஐயா!

தங்களுக்குப் பதில் தந்தது பத்திராதிபரே யொழிய பத்திராசிரியரல்ல. இரண்டுக்கும் ப, ர். போடுவதால் தாங்கள் பத்திராசிரியர் பதில் தந்ததாகக் கருதினீர்கள். அது தங்கள் தப்பிதமல்ல.

தாங்கள் 18-8-28 ல் தான் சந்தாதாரரானீர்கள். சுமார் ஒருவாரத்தில் தங்கள் கடிதத்திற்கு பதில் தாமதமானதற்கு சரியான காரணத்துடன் பதிலை எதிர் பார்ப்பதாக எழுதி விட்டீர்கள். கிருஷிகன் XI வது வாலம் 4 ம் பிரதி 74 ம் பக்கத்தில் "நமது சந்தா நேயருக்கு ஒரு வேண்டுகோள்" என்னும் தலைப்பின் கீழ் "ஏதாவது ஒரு பயிர் செய்து அல்லது செய்ய உத்தேசித்து அதில் ஏதாவது ஒன்றிரண்டு சந்தேகங்கள் ஏற்பட்டு அவைகளைப் பற்றி எழுதினால் கூடிய ஜல்தியில் எழுதத்தயாராயிருக்கிறோம். அதுவும் மறுதபாலில் எதிர்பார்ப்பது கூடாத விஷயம். ஏனெனில் பத்திராசிரியர்களுக்கிருக்கும் பல வேலைகளில் சௌகரியப்பட்டபோதுதான் பதில் எழுதுவார்கள்" என்று எழுதியிருப்பதை வாசித்த பின்னும் அவ்வாறு நமது சந்தா நேயர் எழுதியது சரியாவென்று கவனித்துப் பார்த்திருக்க வேண்டும். கிரு

ஷிகன் பத்திராசிரியரான ம-ா-ள-ஸ்ரீ ராவ் பகதூர் ஜெ செல்வரங்கராஜு காரு இம்பீரியல் உத்யோகஸ்தர். (அதாவது சென்னை ராஜதானியின் கவர்னரால் நியமிக்கப்பட்ட உத்யோகஸ்தரல்ல. இங்கிலாந்திலிருக்கும் இந்தியாவின் செக்ரடரி ஆப் ஸ்டேட்டால் நியமனம் பெற்ற உத்யோகஸ்தர்) சரியான காரணத்துடன் பதில் எழுதவேண்டும் என்பதற்கு ஆங்கிலேய பதத்தில் "எக்ஸ்பிளனேஷன்'' கேட்பதற் கொப்பாகும். ஸ்ரீமான் ராஜுகாரு உத்யோகத்திலிருந்த காலத்திலாவது அதற்குப் பின்னராவது எவரும் அவருக்கு அவ்வாறு எழுதியது கிடையாது. ஆகையால் தான் அவ்வாறு எழுதும்படி நேரிட்டதே யொழிய நாம் நமது பொறுப்பை உணராமல் மனம்போனபடி எழுதும் சுபாவமுடையவர்களல்ல.

பிராம்மண குலத்திற்கே ஓர் இழிவை உண்டாக்கக் கூடியவார்த்தையை எழுதி விட்டதாக நமது நிருபநேயர் கருதுகிருர். எப்போதும் நாம் பிராம்மண குலத்தையாவது பிராம்மணரையாவது நிந்தித்து குறை கூறியதே கிடையாது. இப்போதும் "உத்தமபிராம்மணகுலம்'' என்று கௌரவமாக எழுதியிருக்கிறோமே யொழிய குறைவாக எழுதவில்லை.

நமது பத்திரிகை வாசிக்கும் ஆயிரக் கணக்கான சந்தா நேயர்களுக்காவது யார் மனப்போக்கின்படி எழுதினர்கள் என்பது விளங்குமென நம்புகிறோம்.

இவ்விஷயத்தைப்பற்றி எழுதும் கடிதங்கள் இப்பத்திரிகையில் இனி இடம் பெருது.

பத்திராதிபர்- "கிருஷிகன்"

கிருஷிகன் பத்திராசிரியரவர்களுக்கு,

ஐயா,

1. முந்திரி செடிகள் எப்படி பயிர் செய்கிறது. அதற்கு பக்குவங்கள் என்ன? எவ்வித நிலங்கள் தேவை? அதன் தற்காலப்படி வரும்படி என்ன? மரம் ஒன்றுக்கு எவ்வளவு கொட்டைகள் கிடைக்கும்? மரத்தின் அளவு என்ன சகல விபரமும் எழுதக் கேட்கிறேன்.

2. இதைப்பற்றிய புஸ்தகங்கள் இருந்தால் அனுப்பவும்.

இப்படிக்கு,

எ- மதுரம்-

டாக்டர், புத்தூர்.

பதில்

1 முந்திரி செடிகளைப்பற்றி சௌகரியம் நேரிட்டபோது ஒரு வியாசம் எழுதப்படும்.

2 முந்திரி செடிகளைப் பற்றி புஸ்தகங்கள் வெளியா யிருப்பதாகத் தெரியவில்லை.

ப. ர.

# CATTLE SECTION—கால்நடைப் பகுதி-

## Some Common ailments in Cattle.

## மாடுகளுக்கு உண்டாகும் சில சாதாரண நோய்கள்.

நமது சஞ்சிகை பெரும் அநேக கிருஷிகர் கால்நடைகளில் உண்டாகும் சாதாரண வியாதிகளுக்குக் கூடியமட்டும் கிராமாந்திரங்களிலேயே செய்து கொள்ளக் கூடிய முறைகள் பத்திரிகை மூலமாய் எழுதினால் அவர்களுக்கு பிரயோஜனப்படுமென்று எழுதுகிறார்கள். கால்நடை வியாதிகள் சிகிச்சைக்காக நமது காருண்ய கவர்ண்மெண்டார் ஒரு போதனா சாலை ஏற்படுத்தியிருப்பதுடன் கால்நடை சிகிச்சை இலாகாவென்று ஒரு டிபார்ட்மெண்டும் ஏற்படுத்தி அந்த உத்தியோகஸ்தர்களைக் கொண்டு முக்கியமான இடங்களில் ஆஸ்பத்திரிகள் ஸ்தாபித்து அவைகளில் சுற்றுப் பக்கங்களிலுள்ள கால்நடைகளைக் கொண்டுவந்து சிகிச்சை செய்து கொள்ள வசதிகளும் செய்திருப்பதுடன் அந்தந்த ஜில்லாக்களில் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டு கால்நடைகளுக்கு சம்பவிக்கும் பெருவாரி நோய்களைத் தடுக்கக் கூடிய சாதனங்களையும் அனுஷ்டிக்கும்படி குடிபானவர்களுக்கு போதிக்கவும் கைபாடவும் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட உத்தியோகஸ்தர்கள் கிராமாந்திரங்களுக்கு வரும்போது அவர்கள் சாதாரண நோய்களைக் குறித்தும் கவனம் செலுத்துவதுண்டு. ஆனால் நமது கிருஷிகரில் அநேகர் இவர்களிடம் இன்னும் பூரா நம்பிக்கை வைத்து போசனை கேட்கிறதில்லையென்பது விசனிக்கத்தக்க காரியம்.

சாதாரண வியாதிகளையும் அவைகளின் சிகிச்சைகளைக் குறித்தும் பூராவாய் பத்திரிகைகள் மூலியமாய் தெரிவிப்பது சுலபமான காரியமல்ல. ஆனால் தங்களுக்கு வைத்தியர்களின் உதவி கிடைக்கும் வரை வியாதியை மட்டுக்கு மிஞ்சாமலிருக்கும்படி செய்விக்கக்கூடும். அப்படிப்பட்ட சில குறிப்புகள் சில வருஷங்களுக்கு முன், வலிவில் வெட்டர்னரி டிபார்ட்டுமெண்டு சூப்பிரண்டெண்டெண்ட் அவர்களாகிய மெஸதர் வேர் என்று சொல்லும் துரை நமது கிருஷிகரின் உபகாரார்த்தமாய் எழுதியுள்ளனர். அதிலிருந்து இதனடியில் குறிப்பிட்டிருக்கும் சில சுருக்கமான குறிப்புகள் எடுத்து எழுதுகிறோம். இதை நமது கிருஷிகர் கவனஞ்செலுத்தி வாசித்து அவர்களுடைய சிநேகிதர்களுக்கும் உபகாரப்படும்படி செய்விக்க வேண்டுமென்பது நமது முக்கிய கருதது.

மலச்சிக்கல்.—மலச்சிக்கலானது கால்நடைகளின் முதல் இரைப்பையில் உணவு உலர்ந்து செரியாததால் உண்டாகிறது.

தேக சுகத்தைக் குறைக்கும் சகல ஏதுக்களும் மலச்சிக்கலுக்கு காரணமாக இருக்கிறது.

காரணங்கள்,—மேற் சொல்லியபடி இரைப்பையில் உணவு உலர்ந்து இறுகி கெட்டிப்பட்டு விடுதலும், கால் நடைகள் ஆவலோடு தின்ன விரும்பும் உணவுகளை மிதமிஞ்சித் தின்ன வாய்த்தலும், சத்தில்லாத நாரோடி முதிர்ந்த தட்டைகளைத் தின்னுதலும், வேண்டிய அளவு தண்ணீர் குடியாதிருத்தலுமே மலச்சிக்கலுக்குக் காரணங்களாக இருக்கின்றன.

குறிகள்.—வெளிப்படையாகத் தோன்றும் குறிகளாவன:—கால் நடைகள் சாணம் போடும்போது முக்குகிறது. சாணம் குறைவாயும் புழுக்கையாயுமிருக்கும், சில சமயங்களில் தீனி தின்னாமலும் அசைப்போடாமலும் சோம்பலாய் நிற்கிறது. சிலபோது வயிற்றில் மிகுந்த வலி இருப்பதாய்க் காணப்படுகிறது.

பரிகாரம்—கறி உப்பு—1 அல்லது ஒன்றரைபவுன் அதாவது 7 அல்லது பத்தரை பலம், சுக்குத்தூள்—2 அல்லது இரண்டரை தோலா அதாவது 2 அல்லது இரண்டரை ரூபாயிடை, சுடு தண்ணீர்—2 பயின்டு (40 அவுன்சு) அதாவது சுமார் முக்கால் பக்காபடி இவைகளைக் கலந்துபோட வேண்டியது. குடிக்க ஏராளமான தண்ணீர் கொடுக்க வேண்டும்.

மருந்து கொடுத்து 8, 12, 16 மணி நேரத்திற்குள் அதாவது 20 முதல் 40 நாழிகைக்குள் சாணம் நெகிழ்ச்சியாய்ப்போட ஆரம்பிக்கும்.

வயிற்றில் வலி இருக்கிற சமயங்களில் மிளகுத்தூள் 2 தோலா அதாவது 2 ரூபாயிடை மேற்சொல்லிய மருந்தோடு சேர்த்துக் கொள்ள வேண்டும். 36 மணிவரை அதாவது 90 நாழிகைக்குள் பேதி போகாதிருந்தால் விளக்கெண்ணெய் 10 அவுன்சில் அதாவது ($1\frac{1}{2}$ ஆழாக்கு) நேர்வாளத்தைலம் அல்லது எண்ணெ (Croton oil) 30 சொட்டுவிட்டு கொடுக்கவேண்டும். மருந்து கொடுக்கும் காலங்களில் வைக்கோலாவது தானியமாவது கொடுப்பது உசிதமல்ல. கொஞ்சம் பச்சைப்புல் கொடுக்கலாம், தவிட்டை வெந்நீர்விட்டு அவித்து ஆறியபின் கொடுக்கவேண்டும்.

இதற்குப்பின் ஒருவாரம் வரையிலும் சுக்குத்தூள் $1\frac{1}{4}$ தோலா அதாவது $1\frac{1}{4}$ ரூபா இடை, மிளகுத்தூள் $1\frac{1}{4}$ தோலா அதாவது $1\frac{1}{4}$ ரூபா இடை எட்டி விரைத்தூள் $\frac{1}{2}$ தோலா அதாவது அரை ரூபா இடை இவைகளைக் கலந்து தீனியில் கொடுக்கவேண்டும்.

(எட்டி விரையை அவித்தாவது வறுத்தாவது தான் பொடி பண்ண முடியும்.) கன்றுகளுக்கு மலச்சிக்கலிருந்தால் இரண்டுமுதல் நாலு அவுன்சு அதாவது அரை மாகாணிபடியிலிருந்து மாகாணிபடி விளக்கெண்ணெ வரை கொடுத்தால் நிவர்த்தியாகும்.

2- வயிற்றுப்போக்கு அல்லது சாதாரண கழிச்சல்.—சரியாய்ச் சொல்லப்புகுந்தால் வயிற்றுப்போக்கு ஒரு வியாதியல்ல. மற்ற வியாதிகளின் குறியாகவே இருக்கிறது, கிராமாந்திரங்களில் சரியாக கால் நடைகளுக்குத் தீனிபோடாததால் அவைகளுக்கு வயிற்றுப் போக்கு சாதாரணமாக இருந்துகொண்டிருக்கிறது. இது சாதாரண வயிற்றுப்போக்கு.

இதன் காரணங்கள்.—தின்னுமுணவு நல்லதாகயில்லாததாலும் தண்ணீர் அகப்படாத கோடைகளில அசுத்தமான தண்ணீரைக்குடிப்பதாலும் அவைவயிற்றுத் தீனியோடு இதர வஸ்துக்களையும், காரப் பூண்டுகளையுந் தின்பதாலும், மழைகாலத்தில் முதலில தழைத்த இளம் புல்லை மேய்வதாலு முண்டாகிறது.

அன்றியும் குடலில் பூச்சி உண்டாயிருப்பதாலும், வெக்கையென்ற தொத்து வியாதிகளின் நிமித்தமாயும் உண்டாகிறது,

குறிகள்.—அடிக்கடி தளர்ச்சியான சாணம்போடுகிறது. வாலிலும் பின்னங் காலிலும் கழிந்த சாணம் பட்டிருக்கும். மாடுமெலிகிறது முதலில் சரியாய்த் தெரிகிறதில்லே. ஆனால் கழிச்சல் சில நாளைக்கு நீடித்தால் தின்ற தீனி உடம்பில் சேர்கிறதில்லே, மாடு இளைக்கிறது. வயிறு ஒட்டிப்போய்விடுகிறது, மயிர் சிலிர்க்கிறது. கழியும்போது கொஞ்சம முக்குகிறது.

பரிகாரம்.—கால் நடைகளின் தகுதியை அறிந்து 10 முதல் 20 அவுன்சு அதாவது மூன்றேகால் ஆழாக்கிலிருந்து இரண்டரை ஆழாக்கு விளக்கெண்ணெய் வரை கொடுக்கவேண்டும். இதனல் குடலில் செரியாது உறுத்திக்கொண்டிருந்த தீனிகள் வெளியே வந்துவிடும்.

அனேகமாய் இந்த மருந்து மட்டுமே போதுமானதாக இருக்கும் மேல் வைத்தியம் வேண்டியிருந்தால்,—

காசுக்கட்டி—அரை அல்லது 1 தோலா அதாவது அரை அல் லது 1 ரூபா இடை, சீமைச் சுண்ணாம்பு—ஒன்றரை அல்லது 2 தோலா அதாவது ஒன்னரை அல்லது 2 ரூபா இடை, சுக்கு—1 தோலா அல்லது 1 ரூபாய் இடை இவைகளைப் பொடித்து 20 அவுன்சு அதாவது இரண்டரை ஆழாக்கு அரிசிக்கஞ்சியில் நன்றாய்க் கலந்து கொடுக்கவும்.

ஆகாரம்—கஞ்சியாவது கொதிக்கிற வெந்நீரில் பொதும்பி ஆரிய தவிடாவது கொடுக்கவேண்டும். குடிப்பதற்கு சுத்தமான தண்ணீரைக் கொடுக்கவேண்டும்.

வெக்கை அல்லது மற்ற தொத்து வியாதிகளாகத் தெரிந்தால் தாலூகா தாசில்தாருக்காவது சமீபத்திலிருக்கும் வெட்டரினெரி அசிஸ்டெண்டுக்காவது தெரியப்படுத்தவேண்டும்.

## CORRESPONDENCE,

## கடிதம்

ம-ா-ா-ஸ்ரீ கிருஷிகன் பத்திராதிபரவர்கள் சமுகம் சு. சு, வெங்கிட சுப்பாசெட்டிஎழுதிக் கொண்டது.

ஐயா,

எனக்கு 5 எகரு செம்மண் மணல் தோட்டமும் 6.7 எகர் செஞ்சாள் சுண்ணாம்பு சாள் தோட்டமும் இருக்கிறது.

1 இவைகளில் தென்னை வைக்கலாமா?

(2) தென்னையும் எலுமிச்சையும் கலந்து நடலாமா? தெரிவிக்க வேண்டுமாய்க் கோருகிறேன்,

(3) கிருஷிகனில் கண்டபடி திண்டிவனம் ம-ா-ா-ஸ்ரீ ஓமண்டூர் ராமசாமி ரெட்டியாரவர்களுக்கு 2 எலுமிச்சம் பழம் அனுப்பும்படி 2. அணு ஸ்டாம்பு 4 மாதத்திற்கு முன் அனுப்பினேன். நாளது வரை பதிலே கிடையாது. தாங்களாவது தயவுசெய்து நல்ல தினுசாகவும் பெரும்படியாகவும் காய்க்கக் கூடியதும் சீக்கிரம் பலன் தரக் கூடியதுமான எலுமிச்சம் பழம் 50ம் பெரும் நார்த்தம்பழம் 2ம் விரைக்காக அனுப்பிக் கொடுக்க வேண்டுமாயும் தங்களிட மில்லாவிட்டால் கிடைக்கக் கூடிய இடத்திலிருந்து வரவழைத்து அனுப்பக்கோருகிறேன், கிரயத்தை அனுப்பும்படி எழுதினால் முன்னாடி அனுப்புகிறேன் அல்லது வி. பி. போஸ்ட்டில் அனுப்பினாலும் பெற்றுக் கொள்ளுகிறேன்.

(4) தென்னை பலரகமான நெத்திரன் அல்லது நாத்து யாதொரு குற்றமில்லாமல் தங்கள் கிருஷிகனில் கண்டபடி திடமானதாக தங்களிடத்தில் கிடைக்குமா? விலை என்ன? தெரிவித்தால் 100 கண்ணுகள் அல்லது

சேத்துக்கு பணம் அனுப்புகிறேன். தங்களிடமில்லாவிட்டால் வேறே எந்த இடத்தில் நம்பிக்கையாக வாங்கலாம்? தெரிவிக்கக் கோருகிறேன்.

(5) பழவகை பயிரில் மாதுளை எலுமிச்சை தவிர வேறே எந்த இனுசுகள் அதிகலாபம் தரக்கூடிய தென்பதையும் தெரிவிக்கக் கோருகிறேன்.

விவசாய முறையே தெரியாத எனக்கு தங்கள் கிருஷிகன் ஓர்வழி காட்டியாகவும் உபாத்தியாயராகவுமிருக்கிறது. இதுவே என்னை பழவகைத் தோட்டம் உண்டு பண்ணும்படி தூண்டிற்று. இதையே உபாத்தியாயராக நினைத்து பழவகைச் செடிகள் விருக்ஷங்கள் உண்டுபண்ணத் தீர்மானித்திருக்கிறேன்.

(6) மணிலாச் செடியின் வியாசம் 5, 6 மாதமாக கிருஷிகனில் காணவில்லை— தற்காலம் உலகத்தில் அநேகம் பேர் ஷை மாகுலை செய்து வருவதால் இவர்களுக்கெல்லாம் உபகாரமாகும் பொருட்டும-ள-ஶ்ரீ ஆ. சு: கி. ரெட்டியாரவர்கள் ரொம்பவும் தயவுசெய்து சிரமம் பாராட்டால் விவசாயிகளுக்கு உபகாரமாகும் பொருட்டு தொடர்ச்சியாக மணிலா செடியின் பூர்வவிருத்தாந்தங்களையும் தெரிவித்துக் கொண்டு வருவாரென்று நம்புகிறேன்.

ச. அ. வெங்கிட சுப்பாசெட்டி

## பதில்

(1) தாங்கள் குறிப்பிடும் நிலங்களில் மண் கண்டம் சுமார் 8—10 அடிவரை இருந்து மத்தியில் பாறை தட்டுப்படாமலிருந்து தண்ணீர் போதுமானபடி எக்காலமும் இறைக்கப்போதுமான அளவு இருந்தால் தென்னை வைக்கலாம். இவைகளில் ஏதேனும் குறைவதானல் செடிகள்வளர்ந்தாலும் சரிவரக் காய்க்காது. செத்தும் போகலாம்

(2) தென்னையும் எலுமிச்சையும் தனித்தனியாய் வைப்பதே நலம்.

(3) ம.ள-ஶ்ரீ, ஓமண்டூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் கிருஷிகன் 1 வது வாலம் 3ம்நம்பர் 67ம் பக்கத்தில் 4 தினங்களாய்ப் பெருங்காற்றடித்ததில் பிஞ்சுகள் முதல் விழுந்து விட்டதாகவும் இன்னும் 3மாசங்களுக்கு பழங்கள் அகப்படாதென்றும் தெரிவித்திருக்கிறார். இவ்வருஷம் மழை குறைவால் இன்னும் எலுமிச்சம்பழங்கள்பழுக்கிராதென்றே நினைக்கிறோம், ஏனெனில் பழுத்திருந்தால் முதலில் எங்களுக்கு அனுப்பியிருப்பார். அவ்வாறு அனுப்பாததே பழங்கள் பழுக்கவில்லை என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

சமீபத்தில் நாம் கோயம்புத்தூர் ஜில்லாவில் சுற்றுப்பிரயாணம் செய்தபோது பொள்ளாச்சியில் நல்லஎலுமிச்சம் பழங்கள் விற்றதைப்பார்த்தோம். தங்களுக்கு பொள்ளாச்சியில் யாராவதுதெரிந்தவர்களிருந்து எழுதினல் வாங்கி அனுப்புவார்கள், அப்படியில்லாவிடில் ரூ 2மணியார்டர் செய்தால் கோயம்புத்தூரிலிருக்கும் நண்பர்களுக்கு எழுதி வாங்கி அனுப்பப்பிரயாசைப்படுகிறோம். 50 பழங்கள் வாங்கினல் சுமார் 200 நல்ல விதைகள் தேறலாம்.

(4) திருநெல்வேலி ஜில்லா தென் காசித்தாலுகா இடைகால் போஸ்ட் இடைகாக் கிராமத்திலிருக்கும் ம-ள-ஸ்ரீ வி. பி திருமலையப்ப முதலியாரவர்களுக்கு எழுதினால் அவர்கள் நம்பிக்கையாய் அனுப்புவார்கள்- விலைவிவரம் முதலியவைகளைக் குறித்து அன்னாருக்கே எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

(5) தாங்கள் குறிப்பிடும் நிலத்தில் ஜலவசதியும் வடிகால் வசதியுமிருந்து திராட்சைப்பழம் பயிர் செய்தால் எல்லாப்பழதினுசுகளையும் விட அதிக இலாபம் கிடைக்கும். சாத்துக்குடி ஆரஞ்சி என்னும் கித்திப்பு ஆரஞ்சிச் செடிகளும், எலுமிச்சை, மாதுளைப்போல் இலாபம் கொடுக்கும்:

(6) ம-ள-ஸ்ரீ, ஆ: சு: நித்யகல்யாண ரெட்டியார் அவர்கள் சஜரலி விருப்பதாகக் கேள்விப்படுகிறோம்: அவர்களுக்கு ஏதாவது அசௌகரியம் நேரிட்டிருப்பதால்தான் அவர்கள் அவ்வியாசத்தை முற்றும் எழுதவில்லை. சௌகரியப்பட்டபோது தான் எழுதுவார்களாம். அவர்களை அவசரப்படுத்தி எழுதும்படி சொல்ல விரும்பவில்லை:

ப- ர்-

கிருஷிகன் பத்திராசிரியர் அவர்களுக்கு,

அன்பார்ந்த ஐயா,

நான் தங்களுடைய பத்திரிகையின் சந்தாதார்களில் ஒருவன். என் சந்தா நம்பர் 2031. அடியில் கண்டிருக்கிற, சாகுபடி விஷயமான கேள்விகளுக்குத் தயவுசெய்து கூடிய சீக்கிரம் பதில்எழுதவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நிலம் இருப்பது தஞ்சாவூர் ஜில்லா மாயவரம் தாலுக்கா. காவேரி டெல்டாவில், காவேரியில் பிரிகிற வீரசோழனாற்றின் பாய்ச்சலுக்குட்பட்டது.

1. நஞ்சை நிலம் ஒருபோகம் சம்பா சாகுபடி ஆகிறது. இருமண்பாடுள்ளது, இந்த நிலத்தில் சேடை பாய்ச்சி உழாமல் இரண்டு தாக்கும் மற்றொரு தாக்கு கொத்தி போட்டபடியும் சாய்ந்து விட்டது. ஆற்றில் ஜலமில்லாததினாலும் மழை பெயாததினாலும் நிலம் காயந்துவிட்டது. நிலத்தில் ஆட்டாங் கோரை ஜாஸ்தி முளைத்திருந்தது. அதை ஜாடாவும் இப்பொழுது அறுத்தாகி விட்டது. இப்பொழுது நிலத்தை புழுதி உழவாக உழுது ஜலம் வந்தவுடன் சேடை பாய்ச்சி உழுது உடனே நட்டால் நன்றாக விளையுமா? அல்லது இப்பொழுது புழுதியாக உழாமல் சாணி எரு சாம்பல் எருபோட்டு ஜலம் வந்தவுடன் பாய்ச்சி உழுது நடலாமா. எந்தவிதமான சாகுபடி ஜாஸ்தியாக மாசூல் கொடுக்கும்,

2. மற்றொரு இடத்தில் சம்பா சாகுபடி செய்யும் நிலம்- இருமண்பாடுள்ளது. இது சேடை பாய்ச்சி உழுது கொத்தி மறுபடியும் உழுதுபோட்டபடி ஜலமில்லாததால் காய்ந்து விட்டது: இதில் இப்பொழுது ஆட்டா

ங்கோரை, ஆலக்கீரை நிறைந்துள்ளது: இதை புழுதி உழவாக உழுதுபோட்டு வைத்து ஜலம் வந்தவுடன் சேடை பாய்ச்சி மறுபடியும் உழுது நடலாமா? அல்லது புழுதி உழாமல் ஜலம் வந்தவுடன் சேடை பாய்ச்சி உழுது உடனே நடலாமா? எது லாபகரமாயிருக்கும்?

தங்களுடைய பதிலுக்காக போஸ்டேஜ் ஸ்டாம்பு ஒருஅணா இத்துடன் அனுப்பியிருக்கிறேன்: கூடிய சீக்கிரம் பதில் அனுப்பினால் தங்களுக்குநான் மிகவும் நன்றி யுள்ளவனாயிருப்பேன்:

தங்கள் உண்மையுள்ள

பி- சிதம்பரமுதலியார்-

பென்ஷண்ட் தாசில்தார் & மிராசுதார்-

பதில்

(1) திருநெல்வேலி ஜில்லாவில் மாசியீ அறுவடையான சேடை நிலங்கள் காய்ந்தபின் மழை பெய்தஉடன் புழுதியில் உழுது புழுதியாக்கிவைத்திருந்து வாய்க்காலில் ஜலம் வந்ததும் ஆனி மாதத்தில் நிலத்தில் தண்ணீர் கட்டி அன்றே உழுது சேராக்கி, நிலம் குளிருமுன் உடனே நட்டு விடும்வழக்கம் எப்போதும் அநுஷ்டானத்திலிருந்து வருகிறது- புழுதியில் தண்ணீர் பாய்ந்த அன்றே உழுது சேராக்கி நடாவிட்டால் பயிர் வெக்கரித்துப்போய் விடுகிறதுடன் சரியான மாசூலும் கொடுப்பதில்லை.

இப்பழக்கத்தை மங்க நல்லூர் பண்ணையில் கையாடிப் பார்த்ததில் சரிவர மாசூல் கொடுக்கவில்லை யென்று தெரிகிறது- ஆகையால் தங்கள் நிலத்தில் தண்ணீர் கட்டிய அன்றே சேடை உழவு உழுது அன்றே நடுவது நலமென நம்புகிறோம். புழுதியில் வேண்டாம். அப்படியில்லை யென்று பரீட்சிக்க விரும்பினால் ஒரு தாக்கைமட்டும் புழுதியில் உழுது வைத்திருந்து தண்ணீர் பாய்ந்த அன்றே சேடை உழவு உழுது நட்டும, மற்றத்தாக்குகளைத் தண்ணீர் பாய்ந்த அன்றே சேடை உழவுகள் உழுது அன்றே நட்டும் பரீட்சித்துப் பார்த்துத் தங்கள் அனுபோகத்தைத் தெரிவித்தால் பரோபகாரமாயிருக்கும்

(2) ஆலக்கீரையை மட்டும் மழை பெய்தஉடன் சீவி எடுத்து அப்புறப்படுத்தி மேற் சொன்னபடி செய்தல் நலம்.

(3) தாங்கள் அனுப்பியதாக எழுதியபடி தபால் முத்திரை அதில் காணப்படவில்லை- ஆயினும் உடனே பருவம்செய்ய வேண்டிய அவசரத்தை உத்தேசித்து உடனே பதில் எழுதப்பட்டது.

ப. ர்-

1- ஆடுதுறை 2நம்பர்திஞசு நெல் விதைவிட்டதிலிருந்துஎத்தனை நாளில் தொழுமை நிலங்களில் நடலாமென்பதையும், பயங்கால் நிலங்களில் எத்தனை நாளில் நடலாம் என்பதையும்,

2- முத்துச் சம்பா நெல்விதை விட்டதிலிருந்து எத்தனை நாளில் கொழுமையுள்ள நிலங்களிலும் நடலா மென்பதையும்

2- ஆடிமாதம் 10உ-யில் விதை விட்டு மார்கழி மாதத்தில் அறுக்கும் படியான நெல் தினுசு சடச்சம்பா வாடஞ்சம்பா தவிரவேறு நெல் தினுசு, இருந்தால் அவைகளையும், அவைகள் அகப்படும் இடங்களையும்,

4: ஊடுகுருவை நெல் அறுவடை செய்த பிறகு ஒட்டடன் மகசூலை அதிகப்படுத்துவதற்காக எந்த எருவை உபயோகப் படுத்தலா மென்பதையும் தெரிவிக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்

பதில் S-விஸ்வநாத பிள்ளை

(1) ஜி. இ. பி. 24-ம்நம்பர் பொறுக்கு நெல் வெவ்வேறு பிராந்தியங்களில் வெவ்வேறு கால அளவில் அறுவடைக்கு லாயக்காகிறதென்றும் மதுரை ஜில்லாவில் பெரியாறு பாசான நிலங்களிலேயே முதற்போக காலத்தில் அதாவது ஜூலைமாதத்தில் நட்டதில் 5—ஐந்தரை மாதங்களில் விளைவுக்கு வந்ததாகவும், அதே ஜாதி நெல்லை அதே பிராந்தியத்தில் இரண்டாம்போகமாக ஜனவரிமாதத்தில் நட்டதில் 4 மாதக் காலத்தில் முற்றியதாகவும் மதிராஸ் கவர்ண் மெண்ட் பிரசுரங்களால் தெரிகிறது' இப்படியே ஒரு பிராந்தியத்திலிருக்கும் ஒரு தினுசுநெல் இன்னொரு பிராந்தியத்திற்குக் கொண்டு போய் விதைத்தால் மகசூல் அறுவடை காலம் வித்யாசப் படுவதாகக் கிருஷிகன் வாயிலாகப் பலமுறை தெரிவித்திருக்கிறோம்,

ஆகையால் ஆடுதுறை நம்பர் 2 தினுசுநெல் தங்கள் ஊரில் எந்த பருவத்தில் விதைத்தால் அறுவடைக்கு வர எத்தனை மாதங்களாகுமென திட்டமாய் நம்மால் சொல்வதற்கில்லை. பொதுவாக ஒருதினுசு நெல் விளைவுக்கு வர எத்தனை மாதங்கள் பிடிக்கிறதோ அத்தனை வாரங்களில் நடுவது நலம். கொழுமையுள்ள நிலங்களிலும் பயங்கால் நிலங்களிலும் அநேகமாய் மேற்சொன்னபடி ஒரு மாதத்திற்கு ஒரு வாரம் கணக்குவைத்து நடவேண்டும்.

(2) முத்துச் சம்பா நெல்தினுசு தங்கள் ஊரில் விளைவுக்கு வர ஐந்தரை மாதங்கள் பிடிப்பதாக நமக்கு ஞாபகமிருக்கிறது. ஆகையால் 5வாரம் முதல் 40 நாட்களுக்குள் நடுவதுதான் சிலாக்கியம்.

(3) தாங்கள் குறிப்பிடும் காலத்தில் விளைவுக்கு வரக்கூடிய தினுசுகள் செங்கல்பட்டு ஜில்லாவில் செம்பாளை நெல் தினுசென்றும், கப்பல் கார் என்றும் 2 தினுசுகளிருக்கின்றன. செங்கல்பட்டு ஜில்லாவில் தங்களுக்குத் தெரிந்தவர்கள் யாராவதிருந்து எழுதினால் வாங்கியனுப்புவார்கள் அல்லது 4 வது சர்க்கிள் விவசாய டெப்டி டைரெக்டர் பாங்கிமலைக்கு எழுதினால் அவர்களும் வாங்கி யனுப்புவார்கள்.

(4) குருவை நெல் அறுவடை செய்த பின் பலதினுசு எருக்களைப் போட்டுப் பயிர்செய்தும் அவ்வெருக்களால் ஒட்டடன் அதிக மகசூல்

அகேசயாய்க் கொடுக்க வில்லையென்று இதுவரையில் செய்த பரீட்சைக ளால் தெரிகிறது. ஆகையால் குருவைநெல்லுக்குக் கடைசி களைபரிக்கு முன் முத்துகொட்டை பிண்ணாக்கைக் கொடுக்கலாமென்று நம்புகிறோம். இதுவரையில் இம்மாதிரிகையாடிப் பார்த்ததில்லை. தாங்கள் கையாண்டு தங்கள் அனுபோகத்தைத் தெரிவித்தால் மற்ற விவசாயிகளுக்கு உபகார மாயிருக்கும்.

ப. ர.

கிருஷிகன் பத்திராசிரியர் அவர்களுக்கு

ஐயா,

தங்கள் சஞ்சிகைகள் மாதம் மாதம் வந்து பார்த்து வருவதில் ரொம்ப வும் சந்தோஷப் படுகிறேன். எனக்கும் தங்களால் தெரிந்து கொள்ள வேண்டிய முறைஎன்னவென்றால்:— எனக்கு அர்க்கோணம் தாலுகா விலிருக்கும் கிராமத்தில் நிலங்களிருக்கின்றன. அதில்புஞ்செய் பயிரிடும்கொ ல்லையில் கீழண்டை பாகத்தில் மட்டும் எந்தப் பயிரும் அதாவது கடலைக் காய், எள்ளு எதுவும் பயிராகிறதே யில்லை. மேலண்டை பாகம் மட்டும் பயிர் செழிப்பாக வருகிறது. அது 12 ஏக்கர்நிலம்தான் பயிருண்டாகாத பாகத்தில் என்ன செய்தால் பயிர் உண்டாகும்? தற்காலம் அதில் கடலைக் காய் பயிரிருக் கிறது. தயவு செய்து இதற்குப் பதில் தங்கள் சௌகர்யம் போல் பத்திரிகை வாயிலாகத் தெரிவித்தால் போதுமானது. ரெம்பவும் மன் னிக்கவும்.

கெ. பார்த்தசாரதி ஐயங்கார்
சந்தாதார்.

பதில்

நேரில் அந்நிலத்தைப் பார்க்காமல் பரிகாரம் கூறுவது வைத்தியன் நோயாளியைப் பார்க்காமல் சிகிச்சை செய்வதை ஒக்கும். தாங்கள் பாக்கி மலையிலிருக்கும் 4வது விவசாய இலாகா டெப்டி டைரெக்டர் அவர்களுக்கு எழுதினால் அவர்கள் நேரிலாவது அல்லது தக்க உத்தியோகஸ்தரை அனுப் பியாவது பார்வை யிடச்செய்து இனுமாய் அபிப்பிராயம் கொடுப்பார்கள். அவர்களுக் கெழுதும் தபால் செலவைத் தவிர வேறு தங்களுக்கு எவ்வித செலவும் கிடையாது. அப்படியில்லாது நாமே சொல்லவேண்டு மெனத் தங்க ளுக்குத் தோன்றினால் தயவு செய்து பின் கண்ட கேள்விகளுக்கு பதில் தெரிவித்தால் கூடுமான வரை சொல்லப் பிரயாசப்படுகிறோம்.

(1) அது சதுரமான நிலமா? அல்லது சரிவானநிலமா? சரிவான நில மாகில் எந்தப் பக்கத்திலிருந்து எந்தப்பக்கம் சரிவாகிறது.

(2) கொளத்துவாய் எதிரிலிருக்கும் நிலமா?

(3) மண் தன்மை என்ன? களிமண்ணா? செம்மண்ணா? தோட்டக் கால் நிலம் போன்ற மண்ணா? எல்லாவற்றிற்கும் மேல் களர் நிலமா? மணல் நிலமா?

(4) அந்நிலத்தில் மண்வெட்டி கொண்டு வெட்டினுல் மண்பாக்கு எவ்வாறு போகிறது? சில அங்குலங்களுக்கீழ் இரும்பு போன்ற கெட்டியான தும் டிகனமானதுமான கெடப்பாறைக்குக் கூட அசையாத மண் இருக்கி றதா?

(5) சுமார் ஒரு அங்குல மழை பெய்தால் வெயில் காலத்தில் அம் மண்ணில் எத்தனை நாட்களுக்கு ஈரமிருக்கும்.

(6) ஒருமழை பெய்ததும் அந்த இடத்தில் தண்ணீர் கட்டி விடுகிற தா? அந்த நிலத்தில் பாத்தி கட்டி தண்ணீர் விட்டால் தண்ணீர் அப்படி யே நிற்கிறதா? அல்லது பூமிக்குள் சுவர்ந்து போகிறதா? அல்லது சுவர்ந்து போகிறதாகில் எவ்வளவு நேரத்தில் சுவர்ந்து போகிறது? தண்ணீர்சுவர்ந்து போனபின் காலால் மிதித்தால் சேராயிருக்கிறதா!கெட்டியயிருக்கிறதா?

(7) தண்ணீர் காய்ந்த பின் காலால் மிதித்தால் முள் குத்துவதைப் போல் காலில் குத்துகிறதா? அல்லது மெதுவா யிருக்கிறதா!

(8) அதில் பூண்டுகள் முளைக்கின்றனவா! அல்லது வெறும் பொ ட்டலாய்த் தானிருககிறதா?பல் பூண்டுகள் முளைத்தால் என்ன பூண்டுகள் முளைக்கிற தென்று பேர் தெரிந்தால் எழுதவும்- இல்லாவிடில் பூண்டுகள் மாதிரி அனுப்பவும்.

(9) தாங்கள் அக்கம் பக்கத்திலுள்ள பெரியவாளை விசாரித்து எவ்வ ளவு காலமாய் அந்நிலம் அவ்வாறிருக்கிறதென்றும் அவர்கள் அதற்குச் சொ ல்லும் காரணங்களும் தெரிவிப்பது நலம்: மேற்சொன்ன விஷயங்களுக்கு விவரமான பதில் தெரிவித்தால் எங்கள் அபிபபிராயத்தைத் தெரிவிக்கக் கூடும்:

ப. ர.

ம-ா-ள ஸ்ரீ

கிருஷிகன் பத்திராதிபரவர்கள் சமுகத்திற்கு சைதாப்பேட்டை

அன்பார்ந்த ஐயா,

நான் அனுப்பிய 26-9-28 மணியார்டா கூபனில் கண்டபடி தயவு செ ய்துபாக்குசெல் மகுடஞ்சாவடி ஸ்டேஷனுக்கு பாசு செய்தனுப்பக்கோரு கிறேன்.

(1) தங்கள் 11 ம் வாலம் 64 ம் பக்கத்தில் கண்டபடி எலுமிச்சம் பதிகக்கண்ணுக்காக நீடாமங்கலம் ம-ா- ஸ்ரீ சு சேதுராமய்யரவர்களுக்கு 10.9_28ல் விலை தெரிவிக்கும்படி எழுதிய லெட்டருக்கு பதில் கிடைக்க வில்லை. நல்ல உயர்ந்த ஜாதியாயும் பெரும் பழமாகவும் அதிகம் காய்க்கக் கூடியதாகவும் சிக்கிரம் காய்க்கக் கூடியதும் 6மாதம் முதல்காய்க்கக் கூடிய தும் வைத்து பயிர் செய்ய வேண்டுமென்ற ஆவல் அதிகமாக இருக்கிறது. ஆனதால் தங்கள் தோட்டத்திலிருந்து அனுப்பக் கூடுமானுல் தயவு செய்து

விலை தெரிவிக்கக் கோருகிறேன்.

தங்கள் தோட்டத்திலில்லாவிட்டால் வேறே கிடைக்கக் கூடிய இடங்களிலிருந்தாவது தருவித்துக் கொடுக்க வேண்டுமாய் வணக்கத்துடன் கேட்டுக் கொள்கிறேன். விலையைத் தெரிவித்தால் முன்பணம் அனுப்புகிறேன். இது விஷயத்தில் தங்களுக்கு கொடுத்தசிரமத்துக்காக மன்னிக்கவேண்டுமாய்கேட்டுக் கொள்ளுகிறேன்.

(2) கிருஷிகன் 11ம் வாலம் 139வது பக்கம் கடைசியில் மண்கண்டம் எவ்வளவு சுண்ணாம்பு சாள் எவ்வளவு இருக்கிற தென்பதைத்தெரிவிக்க வேண்டியது அவசிய மென்று எழுதியிருக்கிறது. மண்கண்டம் முக்கால் அடி அதற்கு கீழ் செஞ்சாள் (அதாவது பாக்கு பழத்தோல் வர்ணமுள்ளது) 2—இரண்டரை அடியும் அதற்குக் கீழ் சுண்ணாம்புச்சாளும் இருக்கிறது. செஞ்சாள் ரொம்பவும் பொல பொலப்பாக வெட்டுவதற்கு சுலபமாக இருக்கிறது. சுண்ணாம்புச்சாள் கெட்டியாகவும் வெட்டுவதற்குக் கொஞ்சம் கடுமையாயுமிருக்கிறது. சில இடங்களில் மண்கண்டம் முக்கால் அடிக்கு கீழ் சுண்ணாம்புசாளாகவே 3. 4, அடியிருக்கிறது.

இம்மாதிரி நிலத்தில் தென்னை எலுமிச்சை மாதளை கட்டுமாமரம் வைப்பதற்கு என்ன பக்குவம் செய்ய வேண்டு மென்பதை தயவு செய்து தெரிவிக்கக் கோருகிறேன். (3) பெரும் வெங்காயம் (சுருள்ளி) எந்த ஊரில் இருக்கியாக விற்கும். தற்சமயம் விலையென்ன என்பதையும் தெரிவிக்கக் கோருகிறேன்.

(4) தென்னை தயிர்க்காச்சி பனங்காச்சி என்னும் இனுசு பாப்பாஞ்சாவடி மருடஞ்சாவடியி லிருக்கிற தென்று கிருஷிகன் 10ம் வாலம் 214வது பக்கத்தில் பார்த்தேன். ஷை வகை மூன்றிலும் வகைக்கு 5 செத்துகளாவது காத்துகளாவது வரவழைத்து அனுப்ப வேண்டுமாய்க் கோருகிறேன். அதுகளின் விலையைத் தெரிவித்தால் முன்பணம் அனுப்புகிறேன்.

பதிலுக்கு 1 அணாஸ்டாம்பு இத்துடன் அனுப்பியிருக்கிறேன். அடுத்த அர்ப்பசி மாத பத்திரிக்கையில் இதற்கும் என்னுடைய 24-9-28 லெட்டருக்கும் ரொம்பவும் தயவு செய்து பதில் எழுத வேண்டுமாய்க்கேட்டுக் கொள்கிறேன்,

எடப்பாடி — தங்கள் அன்பிற்குறிய
12—10—28 — ச. கு. வெங்கட சுப்பாசெட்டி

பதில்

(1) பங்களூர்கிடி லால்பாக் கோட்டை ரோட்டிலிருக்கும் செடிகள் வியாபாரிகளான மெஸர்ஸ் தேவப்பா பிரதர்ஸ் அவர்களிடமிருந்தாவது, ஷை. ஊர் ஷை ரோட் எம்பயர் நர்சரி அண்ட் சீட் ஸ்டோர்ஸ் அவர்களிடமிருந்தாவது, எலுமிச்சம்பதியங்கள் செடி 1க்கு 4 அணாவீதம் வாங்கலாம். காம்பிபார்ம் செய்துதாக எழுதினால் நல்ல செடிகளாக அனுப்புவார்கள்.

(2) தாங்கள் சொல்லும் நிலங்களில் தாங்கள் குறிப்பிடும் செடிகள் பின்கண்டவாறு குழிகள் வெட்டிவைத்தால் நன்றாய் வளரும். நல்ல பலனையும் தரும். கெட்டியாயிருக்கும் சுண்ணாம்புகல் கண்டம் 5 அடிவரை இருந்தால் அதுவரை குழிகள் தோண்டி நட வேண்டும். இல்லாவிடில் சுண்ணாம்புக்கண்டம் வேர் இறங்கமுடியாத அவ்வளவு கடினமாயிருந்தால் வேர்கள் அங்கு சென்றவுடன் ஒருக்கால் வேர் இறங்காத காரணத்தால் செடிகள் சாக நேறதுவுண்டு-

(3) பெரும் வெங்காயம் சென்னையில் தற்காலம் வீசை 1-க்கு (அதாவது மூன்றே அரைக்கால் ராத்தல்) ஒன்றரை அணா முதல் இரண்டணாவரை விற்கிறது. சரக்கு அழுகலாயிருந்தால் வீசை முக்காலணாவுக்கும் கொடுக்கிறார்கள்.

(4) தென்னைகாய்ச்சி யென்பது இளநீராயிருக்கும் போது தான் ஜலம் அவ்வாறிருக்கிறதே தவிர முத்த முத்த சாதாகாய்கள் போல்தான் ஆகிவிடுகின்றன. பனங்காய்ச்சி என்பது ஏதோ சீதோஷ்ண பேதத்தால் ஏற்பட்டதே தவிர அக்காய்களால் எவ்வித உபகாரமுமில்லை. ஒரு விசேஷமினுமென்று பார்க்கலாம். முற்றும் வரையில் நிற்பதில்லையென்று சொல்லுகிறார்கள். மேலும் ஒரு ஜாதி தென்னை நெத்துகள் நட்டால் அதே ஜாதி செடிகள் உண்டாகிற நம்பிக்கையில்லை யாதலால் அவ்வளவு கஷ்டம் எடுத்து நெத்துகள் வாங்கி நட்டும் அச்செடிகள் உண்டாகாவிடில் ஏமாற இடமாகும். ஆனதயால் இதில் செலவழிக்கும் நேரத்தையும் கஷ்டத்தையும் வேறு வழியில் உபயோகிப்பது நலமென நினைக்கிறோம்.

## News & Notes

## குறிப்புகள்

### கொட்டும் மரம்

ஆஸ்ட்ரேலியாவில் க்வீன்ஸ்லண்ட் மாகாணத்தில் ஒருமரம் இருக்கிறது. இது தேள் குளவி போல் தொட்ட மாத்திரத்தில் கொட்டும்குணமுள்ளது- அது புதர்போல்வளரும்ஒரு சிறுமரம். பார்க்க அழகாக இருக்கும். ஆனால் கிட்டப்போனவ், மரத்திலிருந்து ஒரு கெட்டவாசனை உண்டாவது தெரியும் அதையும் லக்ஷியம் செய்யாமல் யாராவது அதை தொட்டு விட்டால், அதனால் நமது தேகத்தில் எந்த பாகம் அதன்மேல் பட்டதோ அதில் பொறுக்க முடியாத நோய் உண்டாகும், பட்ட இடத்தில் யாதொரு அடையாளமும் இராவிட்டாலும், சில மாதங்கள் வரையில் அந்த இடத்தைத் தொட முடியாது-

மனிதர்கள் அதன்மேல் பட்டதும் வலி பொறுக்க முடியாமல் பூமியில் புரண்டழுவதுண்டு குதிரைகள் பைத்தியம் பிடித்தமாதிரி அலையும். நாய்களும் அப்படியே-

# "கிருஷிகன்" பஞ்சாங்கம்

**விபவஸு கார்த்திகைமீ — சாலிவாகன 1850 கலியுகாதி 5029, பசலி 1338**
**கொல்லம் 1104, ஹிஜரி 1347 இங்கிலீஷ் 1928ம் ஸு நவம்பர் டிசம்பர்மீ**

| ஜமாதிலாகர் | நவம்பர் | கார்த்திகை | வாரம் | திதி | நக்ஷத்திரம் | யோகம் | விசேஷங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 2 | 16 | 1 | வெ | சது 41-48 | மூல 3 43 | அ13ஜ | கரிநாள் |
| 3 | 17 | 2 | ச | பஞ் 45-29 | பூரா18-31 | சி60 | கடன் தீர்க்க |
| 4 | 18 | 3 | ஞா | சஷ் 48-6 | உத் 22-55 | அ60 | விவாஹம். சூரசம்மாரம் |
| 5 | 19 | 4 | தி | சப் 49-11 | திரு25-52 | அ26சி | மகரம்சியந்தம் |
| 6 | 20 | 5 | செ | அஷ் 49-28 | அவி28, 4 | சி28ம | காலைவாகனமேற |
| 7 | 21 | 6 | புத | நவ 48-14 | சத28, 46 | சி29அ | காலை வெங்காயம் நட |
| 8 | 22 | 7 | வி | தச 45-51 | பூரட்28,22 | சி 60 | மந்திரம் ஜெபிக்க |
| 9 | 23 | 8 | வெ | ஏகா 42-26 | உத் 26-53 | சி27அ | கும்பம் விவாஹம் |
| 10 | 24 | 9 | ச | துவா 38-10 | ரே 24-31 | ம25சி | |
| 11 | 25 | 10 | ஞா | திர 33-9 | அசு 21-24 | சி60 | கரிநாள் |
| 12 | 26 | 11 | தி | சது 27-49 | பரணி17-49 | சி 18ம | அண்ணாமலை தீபம் |
| 13 | 27 | 12 | செ | ○ ப22-9 | கா*13 51 | சி14 அ | விஷ்ணு தீபம் |
| 14 | 28 | 13 | புத | பிர 16-15 | ரோ9 45 | சி60 | காலைவாகனம் வாங்க |
| 15 | 29 | 14 | வி | துதி 10-25 | மிரு5 39 | ம60 | தனிய நாள் |
| 16 | 30 | 15 | வெ | திரு 4_51 | திரு1-51 | சி60 | புதுதவிபூட்ட |
| | | | | சது 55-9 | புன 56-38 | | மாடுவாங்க |
| 17 | 1 | 16 | ச | பஞ் 53-31 | பூச55-50 | சி56ம | காலைவாஸ்துசாந்தி |
| 18 | 2 | 17 | ஞா | சஷ் 52-3 | ஆயி53-55 | சி54ம | கரிநாள் |
| 19 | 3 | 18 | தி | சப் 49-32 | மக 53-6 | ப53சி | சுபங்கள் நீக்க |
| 20 | 4 | 19 | செ | அஷ் 48-12 | பூர53- 21 | சி53அ | கோதுமை விதைக்க |
| 21 | 5 | 20 | புத | நவ 48-5 | உத்ர54:48 | அ55ம | கொல்லத்து வேலை |
| 22 | 6 | 21 | வி | தச49-21 | ஹஸ்57 30 | சி60 | கிணறுவெட்ட |
| 23 | 7 | 22 | வெ | ஏகா 51- 43 | சித்60- 0 | சி60 | சாஸ்திராரம்பம் |
| 24 | 8 | 23 | ச | துவா 55-16 | சித்1 14 | ம1அ | வேட்டைக்குப்போக |
| 25 | 9 | 24 | ஞா | திர 59-46 | சுவா6 . 25 | சி61ம | சுபகாரியம் விலக்க |
| 26 | 10 | 25 | தி | சது 60-0 | விசா12 18 | ம12சி | மழைபெய்யலாம் |
| 27 | 11 | 26 | செ | ● சது4-55 | அநு18.33 | சி50 | அமாவாசை விரதம் |
| 28 | 12 | 27 | புத | ● அ10-14 | கே24-58 | சி25ம | குளம் கிணறு வெட்ட |
| 29 | 13 | 28 | வி | பிர 15-23 | மூல31-8 | சி60 | சந்திரதரிசனம் |
| 1 | 14 | 29 | வெ | துதி19-57 | பூ36,40 | சி60 | கடன்தீர்க்க |

# இரு கிருஷிகர்களின் சம்பாஷணை

ரங்கசாமி பிள்ளை:—ரெட்டியார் அவர்கள்! நேற்றையதினம் சாயந்திரம் தங்களைக் காண்பதற்காகத் தங்கள் வீட்டிற்கு வந்திருந்தேன். தாங்கள் வெளியில் போயிருப்பதாகச் சொன்னார்கள்.

பாக்யம் ரெட்டியார்:—ஆம் வாஸ்தவமே! நேற்று நடந்த கண்காட்சியில் பார்டிலைஸர் ப்ராப்பகாண்டாவால் நடத்தப்பட்ட ஒளி விசித்திரப் படக் காட்சியைப் பார்க்கச்சென்றிருந்தேன்.

ர. பிள்ளை:—அந்தக் காட்சியில் நடந்த விஷயத்தின் சாராம்சம் என்ன?

பா. ரெட்டியார்:—சொல்லுகிறேன். கேளுங்கள். உபன்யாஸம் செய்தவர் சொன்னதாவது, சாணி யெருவைவிட சிறந்த எருவே உலகத்தில் இல்லை யென்றும், நல்ல சாணியெரு கிடைக்காததால் ஸல்பேட் ஆப் அம்மோனியா, ஸூபர்பாஸ் பேட் முதலிய செயற்கை உரங்களை உபயோகிக்க வேண்டுமென்றும் இவ்விதம் இச்செயற்கை உரங்களை உபயோகித்தால் நிலத்தின்கண் மகசூலை அதிகரிக்கச் செய்யலாம் என்றும் சொன்னார். இத்துடன் பார்டிலைஸர் ப்ராப்பகாண்டா ஆப் இந்தியா லிமிடெட் என்னும் கம்பெனியாரின் பிரதிநிதிகளும் பிரசாரகர்களும நம்முடைய நிலங்களைப் பரிசோதித்து அவைகளினுடைய இயல்புக்குத்தக்கவாறு உரங்களைச்சிபார்சு செய்கிறார்கள். இவர்கள் விவசாய இலாகாவின் கொள்கைக்கு ஏற்றவாறு உரங்களைச் சிபார்சு செய்கிறதனால், அநேகமாய் எல்லா மிராசுதார்களும் இவர்களுடைய உரங்களை வாங்குகிறார்கள் என்றும் எடுத்துக் காட்டினார். ஸல்பேட் ஆப் அம்மோனியா ஸூபர்பாஸ்பேட் முதலிய உரங்களை இந்திரிய வஸ்துக்களுடன் கலந்து உபயோகிப்பதால் கிடைக்கும் ஜாஸ்திமாசூலை படங்கள் மூலமாய்க் காண்பித்தார்கள்: ஐக்கிய விவசாயச் சங்கங்களின் நிரூபணைப் பண்ணைகளில், எல்லா அபிவிருத்திகளுடன் இவ்வுரங்களையும் உபயோகிப்பதால் கிடைத்த அதிகமாசூலைப்படங்கள் மூலமாய் செவ்வனே விளக்கிக் காண்பிக்கப்பட்டன.

ர. பிள்ளை:—இவ்வுரங்களை உபயோகிப்பதால் நிலத்தின் தன்மை கெட்டு விடுகிறதென்றும் இவ்வுரங்களை உபயோகிததால், ஜீவாதாரத்திற்கு ஏதுவான பிராணூபிவிர்த்தினி (வைட்டாமின்) என்னும சததுஇல்லாததனால், இவ்வுரங்களின் பயனாகக் கிடைதத தானியஙகளை உண்பது சக்கைககுச் சமானமென்றும் சிலருடைய அபிப்பிராயம்:

பா. ரெட்டியார்:—விவசாய இலாகாவின் அதிகாரியான டைரெக்டர் துரையவர்கள், அவர்கள் செய்யும் பிரசஙகங்கள் தோறும ஸல்பேட் ஆப் அம்மோனியாவையும் ஸூபர்பாஸ்பேட்டையும் வழக்கமாய் உபயோகிக்கும் தொழு எருவில் பாதியுடனாவது அல்லது மூன்றில் ஒரு பங்குடனாவது உபயோகிக்குமபடிச் சொல்லுகிறார்கள் அல்லவா? இவ்விதம் இயற்கை உரங்களையும் செயற்கை உரங்களையும கலந்து உபயோகித்து தற்காத விஸ்தீரி, கால வேறுபாடுகள் முதலியவற்றிற்குத் தக்கவாறு பயிரிடுவது ஒவ்வொரு மிராசுதாரின் கடமையென்றும் வறபுறுததினார்கள், இனி நாம் அவருடைய புத்திமதிகளுக்கு ஏற்றவாறு நவீன விவசாய முறைகளையே கையாட வேண்டும. இனமுமுதல்செயற்கை உரங்களை நாம அதிகமாக வாங்க வேண்டும்,

ர. பிள்ளை,— நீங்கள் சொல்வதிருக்கட்டும். புஸ்தகத்தைப் படித்து விட்டு உபன்யாசம் செய்யும் இவர்கள் பேச்சை நம்பிச் செய்வது "எட்டுச் சுரைக்காய் கறிக்குதவும்" என்று நினைப்பது போலல்லவா இருக்கிறது. இவர்கள் சொற்படி நாம் பயிரிடுவோமானால், நமக்கு ஏதாவது மிஞ்சுமா?

பா. ரெட்டி:—நன்றாய்க் கேட்டீர், நான் இதற்கு முன் எனக்குக் கிடைத்த சாணி எருவை என் நிலங்களில் பாதிக்கு உபயோகித்து, பாதிக்கு எருப் போடாமலே பயிரிடுவது வழக்கம். பார்டிலைஸர் ப்ராப்பகாண்டாவின் பிரசாரகர்கள் சொற்படிக்கு நான் 3 வருஷக்காலமாய் எனக்குக் கிடைக்கும் சாணியெருவை என் நிலங்கள் பூராவிற்கும் உபயோகித்து, இவைகள் எல்லாவற்றிற்கும் ஸல்பேட் ஆப் அம்மோனியாவையும் ஸூபர்பாஸ்பேட்டையும் உபயோகித்து வருகிறேன். இத்தனை வருஷமாய் எனக்குக் கிடைத்துக் கொண்டிருந்த லாபத்தை விட இப்பொழுது இரண்டு பங்கு கிடைக்கிறது. அப்படியிருக்கையில் நாம் ஏன் இவ்வுரங்களை உபயோகிக்கக்கூடாது? இது மாத்திரமல்ல, நான் சாணியெருவிலும் கொஞ்சம் உபயோகிப்பதனால் நிலத்தின் தன்மையும் விருத்தியாகிறது. ஆகவே இப்பொழுதாவது நீர் திருப்தி யடைந்தீரா?

ர. பிள்ளை—அதிருக்கட்டும், நம்மைப்போன்ற சுதேசிகள் அயல் நாட்டிலிருந்துவரும் வஸ்துக்களாகிய ஸல்பேட் ஆப் அம்மோனியா முதலியவைகளை வாங்குவது தர்மமாகுமா?

பா ரெட்டியார்—நன்றாய்ச் சொன்னீர், நீர் சொன்னவை யாவும் தெரியாத்தனத்தால் என்று நினைத்து நான் வருத்தப்படுகிறேன். நம் தாய்நாட்டிலேயே வங்காளம், முதலிய அமே[illegible] மாகாணங்களில் ஸல்பேட் ஆப் அம்மோனியாவை ஏராளமாக உற்பத்தி செய்கின்றார்கள். இப்படியிருக்கையில் இவைகள் அயல் நாட்டுச் சாமான்கள் என்று சொல்வது எப்படிப் பொருந்தும்?

ர. பிள்ளை—இப்பொழுதுதான் எல்லா விஷயங்களும் நான் தெரிந்து கொண்டேன். ஸல்பேட் ஆப் அம்மோனியா, ஸூபர்பாஸ்பேட் முதலிய உரங்களைப்பற்றிய விலைவிபரமும், இவைகள் கிடைக்கும் இடங்களும் இவைகளை உபயோகிக்க வேண்டிய முறை அளவு காலம், முதலியவைகளும் யாரைக் கேட்டால் தெரியவரும்?

பா. ரெட்டியார்—சென்னை அரமனைக்காரத் தெருவிலுள்ள ப்ரன்மாண்ட் கம்பெனியார்களுக்காவது அல்லது பற்பல இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஆயிரக் கணக்கான டெப்போக்களுக்காவது, உமக்கு ஸமீபத்திலுள்ள மேற்படி கம்பெனியார்களின் பிரசாரகர்களுக்காவது எழுதினால் அவர்களால் இயன்ற உதவியைச் செய்யத் தயாராயிருக்கிறார்கள். தவிர ஸல்பேட் ஆப் அம்மோனியாவையும் ஸூபர்பாஸ்பேட்டையும் உபயோகித்த மிராசுதார்களின் அபிப்பிராயம் என்னும் இப்புஸ்தகத்தை ஒரு முறை படிப்பீரானால் உம்முடைய சந்தேகம் எல்லாம் பறந்துவிடும்.

ர. பிள்ளை—உம்மால் இன்று அநேகவிஷயம் தெரிந்துகொண்டேன் இனி நான் இவ்விதமே செய்கிறேன். எனக்கு நேரமாய் விட்டபடியால் நான் போய் வருகிறேன் வந்தனம்.

பார்டிலைஸர் ப்ராபகாண்டா,
ஆப் இந்தியா லிமிடெட்,
தபால்பெட்டி 130 மதராஸ்

(விளம்பரம்)

## The Journal of the Madras Agicultural Students' Union

A monthly Journal in English devoted to the Study of Improved Agriculture. Articles of Scientific and general interest are published along with Extracts & reviews from various Journals both Indian & foreign. Subscription per annum Rs Four. Single copy as Six.

Apply to Manager M. A. S. U. Journal.
AGRICULTURAL COLLEGE, LAWLEY ROAD P. O. *Coimbatore*

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய

இந்த நாவல் "இது சிறந்த நாவல்" படிப்பதில் ஆர்வ முடையோர் புகழத்தக்கபடி நாவலுக்குரிய இலக்ஷணங்களுடன் அமைந்திருக்கிறது. இதனைப் படிக்கத்தொடங்கினால் முடிக்காமல் புத்தகத்தைக் கீழேவைக்க மனம் வராது.

இது பால விநோதினிப் பத்திராசிரியராகிய வரகவி. திரு அ சுப்பரமண்ய பாரதியார் எழுதிய முகவுரையுடன் கூடியது. இதுவரையில்எழுதி வெளிவந்த நாவல்களைவிட இதில், சிறுவரும், சிறுமியரும் உவந்து படிக்கவும், போற்றவும், படித்ததை நினைக்கவும்,பிறருக்குச்சொல்லிப் புகழவும் தக்கபடி உயர்ந்த நீதிகளையும், உலகப்போக்கையும், கற்பின் பிரபாவத்தையும் பெரியாரின் பெருமையையும் நல்லோரின் நடவடிக்கைகளையும், உத்தமகுணப்பெண்களின் இலக்ஷணங்களையும் அநேகமேற்கோள்களுடன் விளங்க வைத்திருக்கிறபடியால், இந்த நாவல், கேவலம் நாவல் வகையில் எண்ணிப் புறக்கணிக்கத்தக்கதல்ல; போற்றத்தக்கதேயாம்.

ஜெகன் மோகினி ஆபீஸ், திருவல்லிக்கேணி, சென்னை.

## விவசாயப் புத்தகங்கள்

| | ரு அ பை |
|---|---|
| விவசாய விளக்கம் | 1—4—0 |
| நெல் | 1—0—0 |
| கரும்பு | 1—0—0 |
| மா | 0—7—0 |

தபால் சார்ஜ் வி. பி. முதலியன பிரத்தியேகம்

ஜி. இராஜகோபால் நாயுடு
பென்ஷண்ட் விவசாய இன்ஸ்பெக்டர்
பெரியபாளையம், பொன்னேரி மார்க்கம்.

---

Printed and Published by J. R. Ranga Raju at the "Raju Press" "Jaghannatha Baugh" Saidapet (MADRAS)